# பனிக்குடம்



கௌசி

பனிக்குடம்

# பனிக்குடம்

கௌசி

வெளியீடு

ஒருதுளிக் கவிதை

புதுச்சேரி




## நூல் விவரக்குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் | : | பனிக்குடம் |
| வகை | : | கவிதைகள் |
| தொகுப்பாசிரியர் | : | **கௌசி** |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| பக்கங்கள் | : | 114 |
| முதற்பதிப்பு | : | அக்டோபர், 2022 |
| அமைப்பு | : | ஈரோடு தமிழன்பன் வாசகர் பேரவை, அமெரிக்கா |
| வெளியீடு | : | ஒரு துளிக் கவிதை, புதுச்சேரி |
| வடிவமைப்பு | : | சே.லோகராஜ், சென்னை |
| அச்சாக்கம் | : | ஒருதுளிக்கவிதை, புதுச்சேரி |
| விலை | : | ரூ. 200/- |

# காணிக்கை



கருப்பையில் வளர்த்தெடுத்து
கையில் கொடுத்த போது
கைக்குள் பொத்தி கலங்காமல்
வாழ்க்கை முழுவதும்
வாழ வைத்த தெய்வம்

சிப்பிக்குள் முத்தாக
சிறகுகளுக்குள் பறவையாக
பாதாளச் சுரங்கமாக
புதையலுக்குள் வைரமாக
பொக்கிசமாக போற்றி வளர்த்த
புண்ணிய ஆத்மா

பூமியைக் காக்கும் பிரபஞ்சமாக
எனக்குப் பாலூட்டிய
தாயுமானவர்

என் உல்லாச வாழ்வுக்கு
வெளிச்சம் போட்ட
விளக்கு

தன் தோளில் சுமந்து
என் உலகத்தைக் காட்டிய
விடிவிளக்கு

கண்ணுக்கு மணியாயென் வாழ்வுக்கு
விதை போட்டு வழிகாட்டிய
விருட்ஷத்திற்கு – என்
அன்புக் காணிக்கை

## அணிந்துரை

# நயம் பட உரை

என்பது ஆத்தி சூடியிலே பெண் பாற் புலவரான அவ்வை எழுதி வைத்த உலகத்தோருக்கான அறிவுரை. எதைச் சொல்வதாக இருந்தாலும் அதிலே ஒரு நயம் இருந்தால் மனதில் லயம் உருவாக்கும். மனம் சொல்வதை அறிவு கேட்டுக்கொள்ளும் என்பதன் மனோதத்துவம் இது. இதனால் தான் கவிதைகளும், கதைகளும் ஒரு கருத்தை இலக்காக வைத்து இயம்புகின்ற வகையிலே இலக்கை இயம்பு (இலக்கு + இயம்பு) என்று நமது இலக்கியமாக ஆகி நிற்கின்றன. அந்த வகையியிலே சகோதரி திருமதி சந்திரகௌரி சிவபாலன் அவர்கள் நுண்ணிய உணர்வுகளை மிக அழகாக கருத்துச் செறிவோடு ஒரு தாயாய், மகளாய், சமூக அக்கறை கொண்டவராய் இந்த நூலிலே நயம் பட உரைத்து இருக்கிறார். தமிழ் வான் அவை அமைப்பாளராக, ஒரு தமிழ் ஆர்வலராக பலருக்கும் தெரிந்தவர், சமூக சிந்தனை கொண்ட எழுத்தாற்றல் கொண்டவராக, கதாசிரியராக, மேலும் ஒரு கவிதாயினியாக பல் முகமும் கொண்டவர் என்று அறிகின்ற பொழுது அவர் மேல் நாம் கொண்ட மதிப்பு இன்னும் அதிகம் ஆகிறது

இந்த நூலில் சுருங்கச் சொல்லி, நம்முள்ளே ஒரு பொறியைப் பற்ற வைத்து விட்டு அறிவு விளக்கை வாசிப்பவரின் சிந்தனை தூண்டும் வண்ணம் செய்து இருக்கிறார். ஒவ்வொரு வரியும் மிக யதார்த்தமாகவும், எளிய நடையுடனும் இருந்தாலும் அரிய எண்ணங்களை நம்முள்ளே விதைத்துச் செல்கின்றன.

*தாயாகத் தன்னை வரித்து அவர் வடித்துள்ள அத்தனை சொற் சித்திரங்களும், எம்மை ஒரு பெண் மகளாகவே மாற்றி விட்டது. ஆண் பால் நான், இந்தப் பகுதியை வாசித்த பொழுது ஒரு பொறுப்புள்ள வாஞ்சையான தாய்க்கு ஒரு மகளாகவே அவதாரம் எடுக்கின்ற அளவுக்கு இரச வாதம் புரிந்து இருக்கிறது. அந்தரங்க அரங்கத்தினில் ஆரம்பித்து ஒரு விதையை விருட்சமாக வளர்க்கின்ற அன்புத்தாயுமாக அவர் வரைந்து இருக்கிறார்,*

*"வலியும் சுகமே" எனச் சொல்லுகின்ற அந்த 4 வரிகள் போதும், தாய்மையைப் பேசுவதற்கு....*

**வலிக்கச் செய்வது யாரென்பதைப் பொறுத்தே...**
**வலியின் வலியும் இருக்கும்....**

*இது போல எமக்கும் பாதிப்பை ஏற்படுத்திய சில வரிகளை மட்டும் இங்கே குறிப்பிடுகின்றேன். முழுப்பகுதியையும் நூலின் உள்ளே நீங்கள் வாசித்து இது போன்ற பல உணர்வுகளில் மூழ்கி முத்தெடுப்பீர்கள்.*

*உலக இரகசியம்- வாழ்ந்து பார்த்தே உணர்ந்து கொள்ளும் அற்புதக் கலை*

*ஒரு பெற்றோரின் மனத்தைக் காட்டும்,*

*'உன்னுள் நாங்கள் வாழப் போகும் நாட்கள் ஆரம்பித்து விட்டன'*

*ஒவ்வொருவரும் தமது பெற்றோர் நம்மைப் பெற்றவுடன் பிள்ளைகளின் வாழ்வு ஒன்றே தமது வாழ்வு என்று குழந்தைகளுக்காக வாழ்கிறார்கள் என்பதை இதை விட எப்படிச் சிறப்பாக யாரால் குறிக்க இயலும்?*

*சேயும் தாயும் உடலால் பிரிந்து இரண்டாக இருந்தாலும், உணர்வாலும் உயிராலும் அவர்கள் இருவர் இல்லை என்பதை என்ன அழகாகச் சொல்லி இருக்கிறார்... நூலாசிரியை....*

**உனக்குப் பசித்தால் எனக்குப் பால் சுரக்கிறதே!!!**
**என்று ஆச்சரியத்தைக் காட்டுகிறார்..**

*இந்தத் தாய்மையைக் காட்டும் பகுதி தாய் என்பவள் பிரபஞ்சத்தை விட மிகப்பெரியதாக நம்முள்ளே விரிந்து பரந்து கிடக்கும் என்பதை உணர்த்துகிறது.*

*அடுத்த 'பெண்மை' எனும் பகுதியில், தானே ஒரு மகளாக மாறி தாய்க்கு ஒரு தாலாட்டுப் பாடுகிறார், ஆசிரியை. பெண்மை ஒரு வரமா அல்லது சாபமா என்று அலசி ஆராய்கிறார். இந்தப் பகுதியின் பெண்மை மென்மை மட்டும் தான் என்று எண்ணி விடாதீர்கள், பெண்மை சொல்லும் உண்மை வலிமை என்பதே இந்தப் பகுதி..*

*எனக்கு ஒரு ஆசை எனும் பகுதியில் ....*

*ஒரு ஆய்வுக்கூடம் அமைக்க வேண்டும் என்ற தனது ஆசையை வெளிப்படுத்தும் போது,..*

**கண்களுக்குள் ஒரு விளக்குப்**
**பதிக்க வேண்டும்....**
**காமுகரைக் காணும் போது**
**எரிய வேண்டும்**

*என்று சொல்லும் வரிகள் சமூகத்தின் அவலத்தை, பெண்களுக்கு எதிரான காமுகர்களின் சபலத்துக்கு எதிரான கருத்துக்களை பதிவு செய்து உள்ளார். காதலின் பசலையில் வாலைக்குமரிப் பருவம் எப்படிப் புலம்புகிறது என்பதை....*

*இடை விடாது அந்த முகமே தொல்லை கொடுக்கிறதே..*

**எண்ணம் செதுக்கிய வடிவத்தை**
**மனதில்**
**ஏந்திப் பிடிக்கத் துடிக்கிறேன்..**
**வெறும் கற்பனை உலகில்**
**உன் உருவம்**
**சொந்தம் கொண்டாடுகிறது...**
**என்ற வரிகள் புலப்படுத்துகின்றன...**

*பெண்மை எப்படி அன்பெனும் மாய வலையில் அகப்பட்டு விடுகிறது என்பதனை,*

**அன்பு எனும் நீரால்**
**அணைக்க நினப்போரின்**
**போலிப் பாசத்தை நேசமென்று எண்ணி**
**அணைந்து போகிறேன்...**

*என்ற வரிகள் அப்படியே போட்டு உடைக்கின்றன...*
*பிரிவை, சோகத்தைச் சொல்லும் வரிகளாக...*

**கண்ணீர்க் குளத்துக்குள் விழுந்து**
**காணாமல் போன உன்னை**
**நான் தேடப்போவதில்லை.....**
**மிக அற்புதமான வெளிப்பாடு**

*அடுத்து வருகின்ற கவிதைகள் அனைத்துமே, மல்லிகை மணம் கமழும் மங்கையரின் மனம். தேனெடுக்கும் வண்டுகளாக வாசகர்கள், மலர்களின் மீது அமர்ந்து பருக வேண்டும், கவிதைக் கருக்களில் உருக வேண்டும் என்ற எண்ணத்தில் புத்தகத்தை உங்கள் பார்வைக்கு விட்டு விடுகிறேன்..*

*இத்தனை பன்முகத் தன்மை கொண்ட அன்புச் சகோதரி திருமதி. சந்திரகௌரி சிவபாலன் அவர்கள் இன்னும் அதிகம் இது போன்ற உணர்வுகளை வடித்து வார்த்தை வடிவில் கிண்ணங்கள் வழிய வழிய ஊற்றி வழங்க வேண்டும் என்ற வேண்டுதல்களோடு, அவர்களின் பணி சிறக்க வாழ்த்தி எல்லாம் வல்ல இறையை வணங்கி மகிழ்கிறேன்.*

அன்புடன்

**கவிக்கிறுக்கன் தேவகோட்டை முத்துமணி,**
ஜகார்த்தா, இந்தோனேசியா.
19 செப்டம்பர், 2021

# ஆய்ந்துரை

கருத்தரித்தல் என்னும் தவத்தின் பயனாக குழந்தை என்னும் வரம் பெறும் தாய்மையின் உன்னதத்தை உயிரோட்டமாகச் செதுக்கியிருக்கும் "தாய்மை" என்னும் நெடுங்கவிதையைப் புத்தகத்தின் தலைவாசலாக்கியிருக்கிறார் கவிஞர், கருக்கொள்ளுதல் என்பதன் மூலம் மானுடப் பிறப்பின் மகத்துவத்தை பெண்ணாய் இருந்து தான் அனுபவித்த உண்மையை தாய்மை பேறு கொள்ளா ஆடவனும் உணரும் வகையில் மிக எளிமையான முறையில் சித்தரித்துக் காட்டுகிறார். கோடிக்கணக்கான அணுக்களுடன் போட்டியிட்டு ஒரு மரபணுவை மாத்திரம் ஏற்றுக்கொண்டதுடன் தொடங்கும் தாய்மையின் அத்திவாரம் பிரசவம் என்பதில் ஒரு கட்டிடமாக முற்றுப்பெறும் நிலையின் பின்னாலும் தொப்புள் கொடி உறவின் வலிமையை பின்னி முடிந்த சடைபோல் கண்ணியமான முறையில் காட்டுகிறார். தரையில் விழும் வித்து வேர்விட்டு இலைவிட்டுக் கிளைவிடுவதை அவதானிக்கும் ஒரு விவசாயியின் மனோபாவத்தோடு தாயின் கருவறை என்னும் இருள் நிலத்தில் வேர்விடும் உயிரை, அதன் வளர்ச்சியை 'அது நிகழ்த்தும் ஆனந்த நெகிழ்ச்சியை அனுபவிக்க விடுகிறார், எந்த மூங்கிலில் நுழைந்தாலும் இசையாகவே வெளிவரும் காற்றைப்போல், எப்படிப்பட்டப் பெண்ணாக இருந்தாலும் சூழ்கொண்டுவிட்டால் மழலை என்னும் தேனிசையை பிரசவித்து தானும் மகிழ்ந்து சுற்றி இருப்பவர்களையும் மகிழ்ச்சி என்ற பெருங்கடல் நீந்த விடுகிறாள். ஒரு

மழலையால் கிடைக்கும் இன்பத்தை அன்றே நம் முப்பாட்டன் ஐயா வள்ளுவர்

**“குழலினிது யாழினிது என்பர்தம் மக்கள்**
**மழலைச்சொல் கேளா தவர்”**

என்று எமக்களித்தக் குறளின் அர்த்தத்திற்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் தான் உணர்ந்து அறிந்த உண்மையை வாசிக்கும் வாசகனுக்கும் கொண்டு சேர்க்கும் முயற்சியில் வெற்றி பெற்றிருக்கிறார் எனலாம். நமது செவிக்குள் சிறு வண்டோ பூச்சியோ நுழைந்துவிட நேர்ந்தால் அதை வெளியில் எடுத்து வீசுவதற்குள் படாதபாடு பட்டு விடுகிறோம், ஆனால் தாய்மை கொள்ளும் ஒரு பெண் தன் கணவனிடமிருந்து பெறும் உயிரணுவை பத்துமாதம் தன் மடியில் சுமந்தவண்ணம் கரு வளர வளர அது கொடுக்கும் இன்பத்தையும் வேதனைகளையும் உணர்ந்து மகிழ்ந்து அதனுடனேயே அதனுடைய உயிர் கைப்பிடித்து கருப்பப் பை என்னும் இருண்ட வீதியில் உல்லாசப் பயணம் செய்கிறாள் என்பதை வரிக்கு வரி அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது

ஒரு இரயிலுக்காகக் காத்திருக்கும் பயணியைப்போல தனது கருப்பப்பை என்னும் சுரங்கத்தில் கண்ணுக்குத் தெரியாமல் உணர்வுகளின் தண்டவாளத்தில் ஓடிவரும் மழலை என்னும் ரயிலுக்காகத் தன்னுடைய இணையுடன் காத்திருக்கும் பரவசம்தான் பிரசவம் என்று கூறுகின்ற கவிஞர், இன்னும் நிறம் தெரியாத அந்த பூவின்மீது நேசமாகப் பேசும் வாசமே அன்பெனப் புகட்டியும் விடுகின்ற புதுமையே கரு சுமக்கும் பதுமை என்கிறார்.

ஒரு பெண் கருத்தரித்தலும் கூட ஒரு திருவிழா என்பது மாதிரிதான். அங்கே கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாக, இங்கே மடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது அங்கு சிலை கர்ப்பக்கிரகத்திலிருந்து ஊருக்கு வருகிறது சிலை. இங்கோ கர்ப்பத்திலிருந்து உலகிற்கு வருகிறது மழலை. அங்கே தேர்வரும் வீதியில் தரிசனத்திற்காக பக்தர்கள் காத்திருக்க இங்கோ மழலை என்னும் தேர்வர வேண்டி கணவன் மனைவி கரிசனத்தோடு காத்திருக்கிறார்கள். திருவிழா காலங்களில் களைகட்டும் ஊரைப்போல களைகட்டும் குடும்பத்தில் பிரசவத் திருவிழாவில் பிரசன்னமாகும் மழலை தெய்வம்,

*தெய்வம் அருள் கொடுக்க மழலலையோ இருள் நீக்கும் என்று சிற்றின்பத்தில் விளைந்த தாய்மை என்னும் பேரின்பத்தை கொண்டாடுகிறாள் என்பதற்கான சான்றாக*

*என்கரங்களைப் பிடித்தே உன் தந்தை நடக்கிறார்*

**என் கரங்களைப் பிடித்து உன் தந்தை நடக்க**
**என் பரிசத்தில் உன் பரிசத்தை உணர**
**அப்பா என்று மனதுள் இசைக்கின்றார்.**
**எனை இறுகப் பிடித்தே என் இதயம் நுழைகின்றார்.**
**நன்றி என்றே காதுக்குள் காற்றாய் இசைக்கின்றார்.**
**பெருங்காரியம் செய்த உணர்வில் கர்வம் கொள்கின்றேன்.**
**என் சுமைகளைத் தன் சுமைகளாய்த் தாங்குகின்றார்.**
**தேடித் தேடி ஆகாரத்தை அளிக்கின்றார்**
**தேடித் தேடி உடல்நலக் குறிப்புக்களை**
**உள்வாங்கி என்னில் பிரதியீடு செய்கின்றார்**

*என்ற வரிகளைக் காட்டலாம்*

*தாயின் மடிக்குள் தன்னைத்தானே உருவாக்கிக்கொள்ளும் சுயமுயற்சியை ஒரு இருட்டறைக்குள் நடத்தி வெளியேறும் தைரியசாலியாய் கரு கொண்டு உரு கொள்ளும் சிசுவைப்போற்றும் கவிஞர் தாயின் மூச்சுக்காற்றை அச்சிசு இசையாய் ரசிப்பதாக உவமை காட்டியிருப்பது சிப்பியின் உள்ளிருக்கும் முத்தென ஒளிவீசுகிறது. பெறப்போகும் குழந்தைக்காய் பல விட்டுக்கொடுப்புகள் செய்யும் தாய் பிரசவம் என்னும் பெருவலியில் சிரிப்பு கொள்வதாகக் கூறுகிறார். வலி யாரால் ஏற்படுகிறதென்பதைப் பொறுத்தே சிரிப்பு என்பதன் காரணத்தை ஆராயுமிடத்து வயிற்றில் வளரும் குழந்தையிடத்தே எத்தனை பெரிய அன்பைப் பொழிகிறாள் தாய் என்னும் மகத்ததான உண்மை புரியும்.*

*வீசும் காற்றை ஸ்பரிப்பதுபோல் வளரும் சிசுவின் வளர்ச்சியை அது வளரும் எல்லா காலங்களிலும் ஸ்பரித்த வண்ணம் அது வழங்கும் இம்சைகளை தன் அஹிம்சையால் தாங்கி மகிழ்வு கொள்ளும் தாய் அது எப்போது வெளி உலகைக் காண்பேன் என்று தவிப்பதற்கு சற்றும் குறைவில்லா எதிர்பார்ப்பாய் அதன் உருவை எப்போது காண்பேன் என்று தவிக்கும் தவிப்பைக் ஏற்படுத்தி அடுத்து என்ன நடக்குமோ என்ற தவிப்பை நமக்கும் கொடுத்துவிடுவதில் ஒவ்வொரு பத்தியாக நகர்த்தி ஊசியில் நூல் கோர்க்க விடுகிறார் கவிஞர்.*

*வாழப் பிறந்த பின்னர் பாதிப்புள்ளாகும் வாழ்வில், வாழப் பிறப்பதற்கு முன்னாலே சாதித்துக் கொள்ளும் சிசுவின் சுய முயற்சியை வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கும் போதிக்கும் பாடமாக்கிப் புத்தகம் போட விளையும் கவிஞரின் வித்தகத்தை வெளிக்காட்ட*

**''வாழ்க்கையின் பயிற்சி வாழ்ந்து பார்த்துவிட்டாய்**
**சாதிக்கத் துணிந்தவர்கள் வலிகளுக்கு வசப்படுவதில்லை**
**முயற்சியின் முடிவில் முன்னேற்றம் தானாய்க் கிடைக்கும்**
**இத்தத்துவத்தை நீயாய் புரிந்துகொள்கிறாய்''**

*இந்த நான்கு வரிகளே போதுமானதாக இருக்கிறது.*

*தாய்மை என்னும் உன்னதப் பதவியை அடைவதற்காக பிரசவம் என்ற வலிமிகுந்த தேர்தலில் பிள்ளை என்ற ஒற்றை வாக்கால் வெற்றி கொள்ளும் பெண்ணானவள் வென்றதும் வாக்கிட்டவர்களை மறந்துபோகும் தலைவர்களைப் போலன்றி, வென்றதும் அந்த ஒற்றை வாக்கிற்காக காலம் முழுவதும் சேவை செய்யும் தியாகச் செம்மலாகிவிடுகிறாள். அப்படிப்பட்டப் போற்றத்தக்க நிகழ்விற்காக உயிரைப் பணயம் வைத்து உயிரைப் பெறும் அந்த போராட்ட நிலையிலும் வயிற்றைக் கிழித்துப் பிள்ளையை வெளியே எடுக்கும் வைத்தியர்களை நடமாடும் பிரம்மாவாகக் கண்ட உண்மையை கவிதைக் கமராவால் படம்பிடித்தும் காட்டியிருக்கிறார்.*

*பிறத்தலின் நிமித்தம் தலைகீழாகும் வாழ்க்கை என்பதை உணர்த்துவதற்காக பிறந்ததும் உன்னை தலைகீழாகத் தூக்குகிறார் வைத்தியர் என்று வாழ்க்கையின் யதார்த்தத்தை மிகத்தெளிவாக சிறியவரிகளாய் எழுதி மிகப்பெரிய அர்த்தத்தைக் காட்டுகிறார்*

**"குழந்தையின் அழுகை தாயை வசீகரிக்கும் வசியம்**
**பசி பட்டினியை மறக்கச் செய்யும் மந்திரம்**
**வேதனையை விளக்கும் வசிய மருந்து "**

*என்ற தன் அனுபவத்தை இருள் படிந்த வீட்டில் குழந்தையே பெரும் ஒளியாகி வீசுவதைக் கண்டவாறே அம்மாவெனப் பதவியுயர்ந்ததைக் கொண்டாடியும் மகிழ்கிறார். நம்மையும் மகிழ்விக்கிறார்.*

வெளி உலகத்தை காண கண்கள் கூசும் சிசு மெல்ல மெல்லக் கற்றுக் கொண்டு தான் வாழப்போராடும் இவ்வுலகை தன்னந்தனியாகவே கற்றுக் கொள்கிறது என்பதை இமைகள் மூடாமல் அவதானிக்கும் கலையில் முன்னோடி தாய் என்பதை ஆணித்தரமாக எடுத்தியம்பி மெய் சிலிர்க்க வைக்கிறார்,

தாய்மையின் வலியையும் மகிழ்வையும் பூரிப்பையும் தாறுமாறாக கொண்டாடி மகிழ்ந்த தாயாய் இருக்கும் கவிஞர், தன் தாய்மைக்குரியானின் பூரிப்பையும் சிசுவோடு கொண்டாடிக் களிக்கும் பேரின்பத்தில் பிறந்த பயனை அடைந்த முழு மகிழ்வையும் வெளிப்படுத்தியுள்ளார். மேனி எழில் குலையுமென்று கர்ப்பம் தரிப்பதைத் தள்ளிவைக்கும் மங்கையர்களுக்கு மத்தியில் தாய்மை அடைவதுதான் பெண்மையின் அழகு என்று ஆணித்தரமாகக் கூறும் கவிஞர் காம்பு பூவை பிரசவித்த பின்னர் தென்றல் அதை தழுவுவதைப்போல் தாய்க்கும் சேய்க்கும் உள்ள நேசத்தை உணரவைக்கிறார்.

தாய்க்குள் வளர்ந்துகொண்டே தாயைத் தேடிய குழந்தை தாயிடமிருந்து தனியாகப் பிரிந்தபின்னே தாயைக் காணும் வரம் பெறுதலுக்கு கருவறை என்னும் கருமரக் குகைக்குள் பத்துமாதம் தவம் புரிந்திருப்பதைப்போலவே தன் வயிற்றிலேயே சுமந்துகொண்டு தனக்குத் தெரியாமல் வளர்ந்து வரும் குழந்தையை வரம் பெற பத்துமாதம் பத்தியத் தவம் புரிந்த உண்மையை பிரசவத்தில் தாயும் உணர்கிறாள். ஒரே திசை நோக்கிய இரண்டு பயணிகள் கொண்ட ஒரு பயணத்தில் ரயிலோடு தண்டவாளம் கொண்ட சிநேகம்போல ஒன்றுக்கொன்று ஒட்டி உறவாடும் அழகை அழகாகவே காட்சிப்படுத்தும் கவிஞர், இந்தப் பயணம் பிரசவம் என்னும் சந்தியில் இருவரின் அழுகையில் மகிழ்வாகவே பிரிய நேர்ந்த பின்னும் அருகருகே இருக்கும் தண்டவாளங்கள் போல பிரிந்து இருந்தாலும் ஆயுளுக்கும் அன்பால் சேர்ந்தே இருக்கிறார்கள் என்று சொல்லாட்சிப் படுத்துகிறார்.

பிறக்கும்வரை தான் சுமந்த பிள்ளையை அது வாழ்தல் பொருட்டு அழ ஆரம்பித்து மெல்ல மெல்ல தன் வளர்ச்சியை ஆரம்பிக்கத் தொடங்கி நடத்தும் சின்னச் சின்ன அசைவுகளை விபரித்தல் மூலமாக அதை சுமக்கும் பொறுப்பை கவிதை வாயிலாக எம்மிடம் திணிப்பதன்

மூலம் நம்மையும் குழந்தையாக மாற்றிவைக்கும் மாய வித்தை புரிந்திருக்கும் கவிஞர் யானையை அங்குசத்தால் அடக்கும் பாகனைப்போல் மனமென்னும் யானையை குழந்தை என்னும் அங்குசத்தால் அடக்கும் பாகனாகவே தெரிகிறார்.

மொத்தத்தில் தாய்மை கொள்ளும் பெண் மாத்திரம் வாசிக்காமல், தாய்மை கொடுத்தத் தகப்பனையும் வாசிக்க நேசிக்கச் சொல்கிறது தாய்மை

இனி பெண்மை, பெண் என்பவள் பேரின்ப புத்தகம். அவளை வாசிக்கத் தெரியாத பேர்களால் அவள் பெருந்துன்ப மத்தளம். பெண்ணுக்கு மண் சேர்க்க வேண்டிய பெருமையை பெண்ணே சேர்த்திருக்கும் பெருமையே இந்த பெண்மை, தன்னைத் தானே சுற்றிவரும் பூமியைப்போல் தன்னைத்தானே சுற்றிவந்து தனது அனுபவங்களை கவிதையாய் பொழிந்திருக்கிறார். தங்கத்தை புடம்போட்டுத் தட்டித்தட்டிப் நகை நகைசெய்யும் தட்டானைபோல் தன்னை புடம்போட்டுப் பெண்ணெனும் பேரழகு நகையாய் மாற்றிய தாயிடமிருந்து பெண்ணாகி மிளிரும் பொன்னாய் பெண்மையைத் தொடங்கிய தன்னை ஆயிரம் கேள்விகள் கேட்டவாறு பெண் என்பவள் யார் என்ற கேள்வியை சமுதாயத்தின் முன் வைக்கிறார் கவிஞர். அந்தக் கேள்விகளினூடாக தன்னை யாரென்றும் தன் மனத்திடமும் உடலிடமும் கற்றுக்கொண்ட பாடங்களை நமக்குப் போதிக்கும் பாடசாலையாக்கி வியப்பிலாழ்த்துகிறார்

ஒரு விதையை மண் தாங்கி வேர்விடவிட்டு மரமாகிக் காய்க்கும் வரையிலும் ஒரு காவல்காரனாய் நிற்கும் காலத்தைப்போல் தன்னைச் சுமந்த தாயவள் தன்னை வளர்த்ததை ஒரு வரமாகக் காணும் ஆசிரியர், கிராமிய சூழ்நிலையில் சின்ன வயதில் தான் விளையாடிய விளையாட்டுக்களால் வாழ்தலுக்கான பாடம் பயின்று கொண்டதிலிருந்து நமது பண்டை விளையாட்டுக்களின் தத்துவத்தைச் சமூகத்திற்கு எடுத்துரைக்கிறார். பக்குவமில்லாச் சிறு குழந்தையாய் பயமின்றி வாழ்ந்த தான் பருவமெனும் பெருஞ்சிறைக்குள் சிக்கிக்கொள்ள நேர்ந்து கல்லூரிச் சென்ற நாட்களில் புத்தகப் படிப்பிலும் மேலாக வாழ்க்கையைப் படித்துக் கொண்ட தன் அனுபவ வேதனையை மிக ஆழமாகவே பதிவும் செய்திருக்கிறார்

தன்னைத் தானே செதுக்கிக்கொண்ட உளியாக

தன்னுடைய அணிகலன் தொட்டு ஆடை புத்தகம் என்று அனைத்திலும் தான் கற்றுக்கொண்டதை நாளை வரும் இளையவர்களுக்கும் ஒரு பாடமாகப் போதிப்பது போற்றுதற்குரியதே தான் யார் தன்னுடைய நோக்கம் என்ன, தன்னுடைய தேவை என்ன, தன்னுடைய இலட்சியம் என்ன என்று அட்டவணைப்படுத்தியிருக்கும் ஏராளமான இடங்களின் தான் வந்த பாதையை திருப்பிப் பார்த்தும் இனி அமைக்கப் போகும் பாதைக்கான திசை நோக்கியும் தன்னுடையக் கண்ணோட்டத்தைச் செலுத்தியிருப்பது கவனிக்கத்தக்கது. தன் வளர்ச்சிப் பாதையில் முன்னேறிச் செல்கையில் ஏற்றத்தாழ்வுகளால் தன்னைத் தன் வழியில் வாழவிடாத சமூகத்தைச் சாடவும் செய்கிறார். எனக்கொரு ஆசை என்று ஒரு ஆய்வுகூடம் அமைத்து இந்த சமுதாயத்தை ஆராய்ச்சி செய்யும் இவரது கற்பனா சக்தி மனித மனங்களைப் பரிசுத்தப்படுத்தும் நவீன இயந்திரமொன்றையே உருவாக்கிச் சிலிர்க்க விடுகிறது.

தன்னிச்சையாக வாழத்துடிக்கும் இளமையை இந்த சமூகம் தடைபோடுவதற்கு காமத்தைக் காரணம் காட்டும் கவிஞர் அந்தத் தடைமூலம் தன்னுடைய நிலவைப்போன்றத் திறமைகள் இருட்டுக்குப் பூட்டப்பட்டுவிட்டதாகக் குற்றமும் கூறுகிறார். உலகம் பெண்ணுக்காக வகுத்த நியதிகளை எதிர்க்கும் அவர், அதற்கான காரணங்களை விபரிக்கும் முறையை உற்றுநோக்குமிடத்து பால் பாகுபாட்டால் பெண்ணின் முன்னேற்றப்பாதையில் எப்போதும் முற்களே விரிந்துக் கிடப்பதை இந்த சமூகத்துக்கு எடுத்து வைக்கிறார், சின்னச்சின்னத் துணுக்குகளைபோல் இருக்கும் பல கவிதைகளில் ஒரு விதைக்குள் மறைந்து கிடக்கும் விருட்சமாய் உயர்ந்த சிந்தனைகள் மறைந்து கிடக்கின்றன. தன்னுடைய சிம்மாசனத்தில் நின்று இந்த சமுதாயத்தில் தான் என்ன ஆவேன் என்று போராடும் உள்ளத்தை இளம் பெண்களின் உள்ளகுமுறலாய் எடுத்து வைத்துப் பார்க்கிறார்

பெண்மையையும் தாய்மையையும் பிணைத்துக் காட்டிப் பெருமிதம் கொள்ளவைத்தக் கவிஞர் வாழ்வின் மூன்றாவது மையான முதுமை என்னும் பெருங்கடலில் மூழ்கி முத்தையும் எடுத்திருக்கிறார். முதுமை என்னும் கனியை சுவைக்கும் சந்தர்ப்பம் வாழ்வில் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. வாலிபம் ஒரு சாரைப்பாம்பைபோல் விரைந்து சென்றதும் ஒரு மனிதனின் வாழ்வில் முதுமை ஒரு ஆமையைப்போல்

*ஆர்ப்பாட்டமில்லாமல் நுழைந்து விடுகிறது. அப்படி நுழையும் அந்த முதுமையில் அனுபவமாகக் கிடைக்கின்ற இல்லாமை, இயலாமை நிறைவேறாமை ஒவ்வாமை என்று பல ஆமைகளும் நுழைவதை சுட்டிக்காட்டி, முதுமையையும் தாய் கன்றை அரவணைப்பதுபோல் கன்று தாயை அரவணைப்பதைக் காட்சிப்படுத்திக் கண்களைக் குளமாக்கி வைக்கிறார் கவிஞர். வாழ்க்கை என்றும் புற்தரையில் இன்பதுன்பம், ஏற்ற இறக்கம், உயர்வு தாழ்வு போன்ற அனுபவப் புற்களை மேய்ந்து வைக்கும் மனிதமெனும் உயரிய மாடு, இளைப்பாறும் முதுமை சூழலில் அசைபோடும் ஞாபகங்களை அறிந்தவர்கள் குறைவு. இங்கே தள்ளாத வயதில் முதுமை மகுடம் அணிந்து அதை இறக்கிவைக்கப் போராடும் தாயின் வேதனையைப் புரிந்து அனுபவப்பூர்வமாக ஆதங்கப்படும் கவிஞரின் கண்ணீராக இவரின் பேனையிலிருந்து சிந்திய துளிகளை வெறும் கவிதை என்று கடந்து போய்விட முடியாது. ஒரு துயர சாகரத்தைச் சில சிலவரிகளுக்குள் அடக்கியிருக்கும் இவரின் கற்பனா சக்தி வானிலும் விரிவானது.*

*தன்னுடைய கற்பனையிலிருந்து வாசகனுக்கும் சிந்திக்க இடமளித்திருக்கும் இலக்கியத்தரம் வாய்ந்த கவிஞரின் இப்படைப்பு கண்களால் பேசப்படும் ஒரு கலைப் பொக்கிஷம்.*

வாழ்த்துகளுடன்

**மெய்யன் நடராஜ்**

# என் மனஓசை

ஒரு தாயின் உணர்வுகளின் போராட்டம் அதில் சுகமும் உண்டு சுமைகளும் உண்டு. சுகமாய்ச் சுமந்து வலியோடு வளர்த்து உயிராய் உரமாய் கனவாய் வெளியுலகில் நடமாட விட்ட உயிர்களில் பெண்களின் மனஓசை ஒவ்வொன்றாய் தாமாக வெளிப்படுத்தும் விதமாக இந்த நூலில் ஒலிக்கின்றன. இவை அத்தனை வடிவங்களையும் நீங்கள் வாசிக்கின்ற போது உங்கள் உணர்வுகளின் போராட்டம், உள் உணர்வுகளின் வெளிப்பாடு மனதுக்குள் தத்தளிக்கும். ஆணாக இருப்பினும் பெண்ணாக இருப்பினும் ஒரு தாயின் வயிற்றினுள் இருந்துதான் உலகத்துக்கு அடியெடுத்து வைக்கின்றார்கள். ஆனால், வாழ்க்கையின் ஓட்டத்திலே ஆண்களின் சிலர் தம்மையறியாமலே பெண்களின் வேதனைகளுக்கும் அவர்களே சில சமயங்களில் காரணமாகின்றார்கள்.

கண்களை மூடி கனமாக வந்து விழுந்த காட்சிகளை இப்புதிய அகத்துக்குள் புதைத்திருக்கின்றேன். இது வெறும் வரிகள் அல்ல. எண்ணங்களின் வடிகால். ஒரு பெண் என்னும் பிறப்பு வெறும் சிருஷ்டிக்கப்பட்ட உருவம் அல்ல. அது உணர்வுகளும் உயிரோட்டமும் குறிக்கோள்களும் கொண்டு கட்டப்பட்ட இராச்சியம். இதற்குள் வாழ்பவர்களுக்கு எதனையும் உவந்தளிக்கும் ஒரு அட்சய பாத்திரம் அவள். அதனால்தானோ என்னவோ இலகுவாக அவள் ஏமாற்றப்படுகின்றாள்.

இந்நூல் தொடுத்துச் செல்லும் உங்கள் இதயங்களில் தாய்மை என்னும் உணர்வு இரத்தத்தோடு கலக்கும், பெண்மை வீசுகின்ற காற்று அனலையும், அனுதாபத்தையும்

*உணரவைக்கும் முதுமை உங்களைத் தாலாட்டும் வாழ்க்கையின் நிலையாமையைப் புரியவைக்கும்.*

**மூளையின் அடங்காத ஆட்டிப்படைப்பு**
**ஆழமாய் குடைந்ததால்**
**வார்த்தைகளைக் கட்டிப்போட முடியாமல்**
**கணினிக்குள் புதைகின்றேன்.**

*வாழ்க்கை ஒரு ஆச்சரியம். அதில் பெண்மை பேராச்சரியம். பெரும் பெட்டகம் என்பதைப் புரிய வைக்க இந்நூல் கொண்டு உங்கள் இதயங்களுக்குள் புகுந்து கொள்ளுகின்றேன். இந்நூலுக்கு ஆய்வுரை கேட்ட போது அகன் ஐயா சுட்டுவிரல் நீட்டியபோது அகப்பட்டுக் கொண்ட கவிஞர் மெய்யன் நடராஜா என்னை யாரென்று தெரியாமலே என் எழுத்துக்கு மாலை சூட்டி ஆய்வுரை தந்தார். அவருடைய ஆழமான எண்ணப் பதிவுகளுக்கு மிக்க நன்றி, பெண் ஏந்தலாய் பெண்கள் திறமைகளுக்கு மகுடம் சூட்டுகின்ற அகன் என்னும் அமிர்த கணேசன் அவர்கள் என் நூலுக்கு வாழ்த்துரை தந்து எனக்கு மகுடம் சூட்டியமைக்கு மிக்க நன்றி என்னும் சொல்மாலையை அவருக்குச் சூட்டுகின்றேன். அணிந்துரை கேட்ட போது அடுத்த வாரமே என் நூலுக்கு அணிகலனை அணிவித்த என் அன்புக்குரிய உடன்பிறவா சகோதரன் இந்தோனேசியா கவிக்கிறுக்கன் முத்துமணி அண்ணாவுக்கும் மனமார்ந்த நன்றியை காணிக்கையாக்குகின்றேன். வழமைபோல என்னுடைய புதிய அகத்திற்கு பனிக்குடம் என்று பெயர் சூட்டிய என் பல்கலைக்கழகத் தோழன் வாசக விருட்சம் சிவலிங்கம் இராஜேந்திரம்பிள்ளைக்கும் மிக்க நன்றி. தூரிகையால் காவியம் படைத்து கவிதையால் காட்சிப்படுத்தும் என் அன்புக்குரிய சகோதரன் தோஹா வாழ் அரவிந்த் அவர்களுக்கும் கவிதைக்குத் தாலாட்டாய் தட்டிக் கொடுப்பைத் தந்து என்னை எப்போதுமே அரவணைத்துக் கொள்ளும் நான் உரிமையோடு அக்கா என்னும் அரியணையில் வைத்திருக்கும் கவிஞர் கலாநிதி ஜீவகுமாரன் அவர்களுக்கு மிக்க நன்றி.*

*பெண்ணின் பருவங்களுடன் நீங்கள் பயணம் செய்வதற்கு என்னுடைய எண்ணங்களை நூலாக்கி உங்கள் கரங்களில் தவழ வெளியீடு செய்யும் அட்லாண்டா உலகப் பெண்கள்*

*பேரவை - வல்லினச் சிறகுகள் அமைப்புக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். உங்கள் மனதுக்குள் உடையும் பனிக்குடம் பிரசவிக்கும் எண்ணஅலைகளுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும்*


இவள்

**சந்திரகௌரி சிவபாலன்(கௌசி)**

Felder str 56

42651 Solingen

Germany

202/22605546

015209419269



## தாய்மை 1

அந்தரங்கங்களில் அற்புதம் தோன்றும்
அழுக்கென்பார் இரத்தத்தில் சொர்க்கம் பிறக்கும்
தலையணை மந்திரம் தாரகமந்திரமாகும்
இருட்டறை எதிர்காலத்தைக் காட்டும் – அங்கு
மனிதப்படைப்பு புனிதமாய் உருவெடுக்கும்.

பலரைத் தோற்கடித்து எனக்குள்
உரிமையுடன் நுழைகின்றாய் நீ
ஓருடலில் ஈருயிராய் கலக்கின்றாய்
மார்பகங்கள் மெல்ல வீங்கும்
உள்வளரும் உயிருக்கு மூளை
உணவு தயாரிக்க உத்தரவிடும்
உடலில் மாற்றங்கள் தோன்றும்
உந்தி மெல்லப் பெருக்கும்
உருவத்தில் பொலிவு மெருகேறும்
உண்பதெல்லாம் வாந்தியாய் வெளிவரத் துடிக்கும்
உருவெடுக்கும் குழந்தைக்கு தலைமயிர்
உருவெடுத்து வளர்கிறதெனும் பாட்டியின்
உண்மைக்குரல் ஆறுதல் அளிக்கும்.

நிமிர்ந்து அமருகின்றேன்
நான் தாய்!
நான் அம்மா!
என் பலவீனத்தில் உன் தந்தையின் பலத்தில்
உன் உயிர் என்னுள் சிறையானது
என் மறுபிறப்பாய் உன் தந்தையின் மறுபிறப்பாய்
என் மடியில் தவழ காத்திருக்கும்
உன் வருகைக்காக
நகருகின்ற நாட்களைக்
கணக்கு வைக்கத் தொடங்குகின்றேன்

என் கரங்களைப் பிடித்து
உன் தந்தை நடக்க
என் பரிசத்தில் உன் பரிசத்தை உணர
அப்பா என்று மனதுள் இசைக்கின்றார்.
எனை இறுகப் பிடித்தே என் இதயம் நுழைகின்றார்.
நன்றி என்றே காதுக்குள் காற்றாய் இசைக்கின்றார்.
பெருங்காரியம் செய்த உணர்வில் கர்வம் கொள்கின்றேன்.
என் சுமைகளைத் தன் சுமைகளாய்த் தாங்குகின்றார்.
தேடித் தேடி ஆகாரத்தை அளிக்கின்றார்
தேடித் தேடி உடல்நலக் குறிப்புக்களை
உள்வாங்கி என்னில் பிரதியீடு செய்கின்றார்

கருவின் மலர்வில் மணம்வீச
ஆதார வேர்களுக்கு
ஆரோக்கிய நீர் வேண்டும்
உலகுக்கு உன் வரவு
உபயோகமாக வேண்டும்
உதிப்பதும் மறைவதும்
பகலவனின்
பழக்கம் அல்ல பணி

கருப்பைப் பரிசோதனைக் கூடத்தில்
உன் அங்கங்களைப் பொருத்துகிறாய்
உன்னை நீயே வடிவமைக்கிறாய்
கருப்பைக் குளத்தில் நீச்சலடித்து
அங்கசுகம் அனுபவிக்கின்றாய்

அண்ட இருட்டின் அனுபவம்
என் மூச்சின் அற்புத தாலாட்டு
அணுஅணுவாய் உனக்குள் இன்பம்.

அங்கங்களால் உரிமைப் போராட்டத்தை
மெல்லமெல்ல எனக்குள் ஆரம்பிக்கின்றாய்
அடித்தாலும் உதைத்தாலும்
ஆக்கினைகள் செய்தாலும்
அன்போடு இரசிக்கும்
அந்தமனம் தாய் மனமே

நான் என்னைத் துறந்தேன்
உன்னை வளர்த்தேன்
உனக்காய் சுவாசித்தேன்
உனக்காய் உணவு உண்டேன்
விரும்பிய உணவுகளை
விரும்பியே தவிர்த்தேன்
மந்திரங்கள் செபித்தேன்
கரடுமுரான பாதைகளின் தடங்களை
நீ அறியாதிருக்க என் கைகள்
பாரந்தாங்கியாகியது
பவ்வியமாய் நடந்தேன்
பவித்திரமாய் உறங்கினாய்
என் நோய் உன் நோயாகுமென
உனக்காய் என்னை அவதானித்தேன்

எனக்குச் சுத்தமாய் புரியவில்லை
வலிக்குக் கூடச் சிரிப்பு வருமா!!
வலிக்கச் செய்வது யாரென்பதைப் பொறுத்தே
வலியின் வலிமையும் இருக்கும்
சுகமாய் சுமந்த வலியின் வேதனை
உன் விளையாட்டில் எல்லைமீறும்

உருண்டு சுருண்டு இரு கை கூப்பிக் கண்மூடி
கருப்பை மண்டலத்தில் தவமிருந்து – என்
10 மாதக் கற்பித்தலை கற்றுக்கொண்டாய்
என்நோய் என்குணம் என் பிரதியாக
எழுந்து நிற்பாயென்று மனதால் கையெழுத்திட்டாய்

கருவறை என்பதோர் அணைக்கட்டு
பனிக்குடநீரும் பரிசுத்த தீர்த்தம்
நீந்திக் குளித்து – அவ்
இசைக்குள் தூங்கிப் போகும் சுகம்
பாரில் எங்கும் எப்போதும் கிடைப்பதில்லை.
கருவறை அமைதி ஆனந்தம்
வேறெங்கும் கண்டவர் இல்லை

எனக்குள் வாழ வாழிடம் தேடிய நீயே
உலகுள் பிரவேசிக்க வழியையும் தேர்ந்தெடுத்தாய்
அழுதேன் துடித்தேன்
உனது அவசரமும் எனது துடிப்பும்
அக்கண அகோர போராட்டம்

உயிரொன்று உருவாகும் உன்னத பயணம்
காலத்தின் கணக்கில் கட்டுப்பாட்டைக் கடக்கிறது
வாழ்க்கைப் பயணத்தின் வரம்புக்குள் நுழைகிறது
உந்துவிசையும் உந்தியின் தள்ளுவிசையும்
ஆரம்பக் கட்டத்தில் ஆரம்பமாகிறது.

என்னுள் உன் உருவம் எல்லை கடக்கிறது
நீ வர எத்தனித்தாயா? இல்லை
வரவுக்கு அஞ்சினாயா?
காலம் போட்ட கணக்கை உன்னால்
கட்டுப்படுத்த முடியவில்லை.
போராட்ட வாழ்வை வளரும் வீட்டில் நடத்துகின்றாய்
முட்டி மோதுகிறாய் முழுவதுமாய் முழுவதுமாய்
கழுத்தைச் சுற்றிக் கொள்கிறது உன் உணவுக்குழாய்

வாழ்க்கையின் பயிற்சி வாழ்ந்து பார்த்து விட்டாய்
சாதிக்கத் துணிந்தவர்கள் வலிகளுக்கு வசப்படுவதில்லை
முயற்சியின் முடிவில் முன்னேற்றம் தானாய் கிடைக்கும்
இத்தத்துவத்தை நீயாய் புரிந்து கொள்ளுகின்றாய்

கழுத்தைச் சுற்றிக் காலனாய் உணவுக்குழாய்
உன் வாழ்வை முடிக்க இறுக்கிப் பிடிக்கிறது.
விரைகின்ற வைத்தியரும் என்னுள் இருக்கும் உன்
விடுதலைக் கணக்கை சுருக்கி விடுகின்றார்.
அவசரமாக அடிவயிற்றில் கத்தியை வைக்கின்றார்.
உரக்கச் சொல்கின்றேன் பிரம்மாக்குப் பின்
பிறப்பெடுக்கும் கடவுளர்கள் வைத்தியர்களே.
பிறப்பின் அர்த்தம் புரியச் செய்ய
தூக்கி எடுக்கின்றார்கள் துடித்துப் போகின்றாய்.
ஆச்சரிய உலகு கண்டா! பிரமாண்ட உருவங்கள் கண்டா!

எம் இருவருக்குள் இருந்த
உணவுத் தொடர்பு
அறுக்கப்படுகின்றது
என்னிலிருந்து உடலால் பிரிக்கப்படுகின்றாய்.

தலைகீழாய் மாறும் வாழ்க்கையறிய – உன்னை
தலைகீழாய்த் தூக்குகின்றார் வைத்தியர்
முதல் முதலாய் அழுகின்றாய்.
இன்னும் இருக்கின்றது
வாழ்ந்து பார்.
வாழ்க்கை உனக்குக் கற்பிக்கும் பாடம்

வெட்டிப்பிரித்து என் நெஞ்சிலே போட்டபோதே
புரிந்தது தாய் ரசிக்கும் சங்கீதம்
உடலின் உக்கிர வேதனையின் மருந்து
பிய்த்து எடுத்த கலங்களின் காயத்தின்
வேதனையை வென்ற சுகம் அத்தனையும்
தன் மழலையின் முதல் ஆஇ ஓ என்னும்
அழுகை ஒலியின் காந்த ராகம்

ஓசைக்கு வசீகர சக்தியுள்ளது என்று
வாழ்ந்து பார்த்து உணர்ந்து கொண்டேன்
காதலியின் காலடி ஓசையிலும்
கலகலக்கும் சிரிப்பின் ஒலியிலும்
தன்னை மறக்கும் காதலனின்
நிலையும் ஓசையின் சக்தியே

குழந்தையின் வசீகரம்
தாயை வாழவைக்கும் வசியம்
பசியும் பட்டினியும்
மறக்கச் செய்யும் மந்திரம்
சொர்க்கத்தைக் காட்டும் சொர்க்க வாசல்
வேதனையை விலக்கும் விசித்திர மருந்து

அம்மாவாய் நான் பதவி உயர்வு பெற்ற போது
உன் அழுகையில் என் சிரிப்பு ஆரம்பமானது
உருண்டு பிரண்டு உல்லாசம் கண்ட உலகை
உதறித்தள்ளி அந்நிய உலகுள் பிரவேசிக்கின்றாய்

கண்ணில் தெரியும் உருவங்கள் - உன்
கண்களுக்குப் பிரமாண்டமாய் புலப்படுகிறதா?
பிரமாண்டமான பிரச்சினைகளை - நீ
எதிர்கொள்ளக் கற்கப் போகின்றாய்
மெல்லமெல்ல புரிந்து கொள்கிறாயா?
புரிந்து வாழக் கற்றுக் கொள்கின்றாய்.

சிரிப்பைக் கற்கக் காலம் தேவை
அழுகை அவசரமாகவே ஒட்டும்
இது உலக இரகசியம்
வாழ்ந்து பார்த்து
உணர்ந்து கொள்ளும் அற்புதக் கலை

கருவறையில் வளர்ந்து
பனிக்குடநீரில் குளித்து
பூமிக்குத் தத்துக் கொடுத்ததும்
வாழ்க்கைப் பரீட்சை ஆரம்பமாகிவிடும்
ஆரம்ப அழுகுரல் தொடக்கப்புள்ளி

அம்மாவைக் கண்டு சிரிக்கின்றாய்
உன்னுள் ஆழமாய்ப் பதிந்த
பேச்சு மூச்சு மணம்
என் இணைப்பைத் தேடி
அழுது அடம் பிடிக்கின்றாய்.
அப்பாவைப் பார்க்கின்றாய்

விரிந்த பரந்த காந்தக் கைகளால்
அள்ளி உன்னை ஆசையாய் எடுக்கின்றார்
அந்நியன் என்றே அலறுகின்றாய்.
அந்நியனின் ஸ்பரிசத்தை உணர்வதாய்
எனக்கு அழைப்பு விடுக்கின்றாய்
மனதுக்குள் அந்த ஸ்பரிசம் இதமாகின்றது
அந்தக் கைகள் தாயின் கருவறை சுகத்தை
தருவதாய் உணர்கிறாய்
எங்கேயோ கேட்ட குரல்
அடிமனதில் ஆழமாய் தேங்கியிருக்கு
ஆனந்தக் குரல்

அப்பாவின் மணத்திலும் ஆசை பிறக்கிறது
அவர் விரல்களை இறுக்கப் பிடிக்கின்றாய் - உன்
இதயத் துடிப்பு இதமாய் இசைக்கிறது - உன்
மரபணுக்களுக்கு உரியவர் என்னும் உண்மை
புரிகிறதா? இல்லை உணர்கிறாயா?
பூமிப்பரப்பில் அசைக்க முடியாத அற்புதமே
எங்கள் மறுபிறப்புத் தத்துவமே நீதான்.
உன்னுள் நாங்கள் வாழப்போகும்
நாட்கள் ஆரம்பித்து விட்டன.

கள்ளமுள்ள குழந்தை
உலகின் எந்த மூலையிலும் இல்லை
களங்கமுள்ள குழந்தை
காட்சிப்படுத்த முடியாது
வளர்ச்சிப் படியில்
காலம் கற்றுக் கொடுப்பவை
இப்பாடங்களுமே

முகம் காட்டும் முத்திரைகளில் – நான்
முழுவதுமாய் தொலைகின்றேன் – உன்
விரல்களின் நுனிகள்
என் முகத்தில் கோலம் போடுகின்றன
நேரம் குறிக்காது என்னை நிதானித்து அழைக்கின்றாய்
உலகைக் காண்பதற்கு முன் – உன்
கண்களுக்குள் என் உருவம் பிரமாண்டமாகத் தெரியலாம்
என்னை முழுவதுமாய் காத்தெடுத்த தாய் யானென்று
நன்றி தெரிவிக்கின்றாயா?

மார்பகத்தில் நீயாய் உருசிக்கத் தொடங்குகிறாய்
நீ வாழ்க்கைப் பாடத்தின் படிப்பிற்குப்
பிள்ளையார் சுழி போடுகின்றாய்.
உனக்குப் பசித்தால் எனக்குப் பால் சுரக்கிறதே
பசித்தால் பால் சுரக்கும் என்ற பட்டப்படிப்பை
படித்ததனால் தானோ உன்னை நான்
அணைக்கும் போதெல்லாம்
என் நெஞ்சுச் சீலையை இழுத்து இழுத்து
என் மார்பகத்தைத் தேடுகின்றாய்.

சில்லறைச் சுகம் காணும் மனிதர்கள் மத்தியில்
பேரின்பம் கண்ட சுகம் உன் களங்கமில்லாச் சிரிப்பு
அற்புதக் காட்சி தேடி அலையும் மனிதர்கள் மத்தியில்
அற்புதக் காட்சி உன் கைகால் அசைவின் நாட்டியம்
பணத்துக்காய் பறக்கின்ற மனிதர்கள் மத்தியில்
உத்தமம் நாள் முழுதும் உனக்காய்ப் பறந்தாற்றும் வேலை

முகம் பார்த்துச் சிரிக்கின்றாய்
முழுக்கவலைகளின் முடிச்சுகளும்
அவிழ்க்கப்படுகின்றன.
ஆண்டவனின் அற்புதப் படைப்பு நீ
இதை எதிர் வாதம் செய்ய யாருமில்லை

நீருக்குள் கிடந்தாய் நீந்திக் களித்தாய் – இன்று
நனைந்துவிட்ட உள்ளாடை மாற்ற வீறிட்டு அழுகின்றாய்
உடை மாற்றக் குனிந்த தந்தைக்கு
உன் கழிவுநீர் பன்னீர்க் குளியல்
முகம் துடைத்து முழுமூச்சாய் – உன்
உடைமாற்றும் கலையைக் கற்றுக் கொள்கிறார்
தந்தைக்கு நீ செய்த முதற் பணிவிடை
இதுவல்லவா!

காத்திருக்காத காலசக்கரம்
என்னையும் உன்னையும்
இணைத்துக் கொண்டு ஓடுகின்றது
அந்தரத்தில் எறிந்து – உன்னை
அலாக்காய்ப் பிடிக்கின்றார் தந்தை
ஆரவாரமாய்ச் சிரிக்கின்றாய்
ஆபத்தை அறிந்து கொள்ள உன்
மூளை கற்றுக் கொள்ளவில்லையா!
அதியுச்ச நம்பிக் கையா
அப்பாவின் கை!

என் உதிரப் போக்கு மாதக் கணக்கை
மறக்காது தெரியப்படுத்துகிறது என்
உடல் துவண்டாலும் உதிரம் செலவானாலும்
உன் பணியை ஆறாய் ஓடி நீராய் முடிக்கின்றேன்.

பாலுக்குள் தேனெடுத்து பக்குவமாய் ஊட்டும்போது
பாருக்குள் நீ செய்யும் பதவிகளை உணர்கின்றேன்
நீருக்குள் சுவை எடுத்து நீகாணும் சுவைகாண
வேருக்குள் ஊறிவரும் நீரூற்றாய் உணர்கின்றேன்
தென்றல் குடைபிடிக்க தேனருவி நீர் தெளிக்க
நீண்ட தூர நடைப்பயணம் நீயும் நானும் போகையிலே
நித்திலமாய் உன் முகத்தில் நீர்த்துளிகள் விழும் போது
சிந்திவிழும் துளிகளுக்கு விரல் முத்தம் தருகின்றாய்
நான் காணும் நவரசங்கள் உன் முகத்தில் கோலமிட
நீ காட்டும் அபிநயங்கள் நெஞ்சுக்குள் சுவை கூட்டும்

விரல் பிடித்து நடக்கையில்
விடுதலையாய் நீ காட்டும்
சில்மிசங்கள் சிதையாத வளர்ச்சியின்
சிகரங்கள் என்றே உணர்கின்றேன்.

சின்னஞ்சின்ன உயிரினங்கள்
தடவும் உன் விரல்கள்
ஆராய்வின் ஆரம்பக் கட்டத்துக்கு
அடியெடுத்து வைக்கின்றாய் என்றேன்.

வானப்பரப்பின் வடிவங்களை நீ
வரிசைப்படுத்தும் போது வானவியலாளர் என
வாய்விட்டுப் புகழ்ந்தேன்

உச்சஸ்தாயில் நீ ஓலமிட்ட போது
சங்கீத சாம்ராஜ்யமே உன் காலடியில் என்றே
சந்தோசம் கொண்டேன்.

தத்தித் தத்தி நீ நடந்தபோது
தக்கதிமிதா என்று நானறியறிமலே
என் உதடுகள் ஓசையிட்டன

எட்டி எட்டி நீ நடைபயில
எட்டாத உயரம் நோக்கி
முன்னேறுகிறாய் என்று – உன்
முயற்சிக்கு முத்தம் தந்தேன்

அம் என்று அடையாளம் காட்டி
என்னை அழைத்த போது
பேசுகிறாள் பேசுகிறாள் என்றே
உன் பேச்சுகளே எங்கள் பேசு பொருளாகியது
என்னைச் சுற்றியுள்ளோர் செவிகளுக்குச்
சுவாரஷ்ய விருந்தாகியது
உலகமே என் காலடியில் என்றே
மகிழ்ச்சி கண்டேன்

குழந்தையின் முதல் வார்த்தை அம்.
அம் கபால உச்சியை திறக்கும் மந்திரம்.
இயற்கை ஆன்மீக சக்தியை இழுக்கும் மந்திரம்.
இம் மந்திரமே குழந்தை முதல் மொழி
பிரபஞ்சத்தைத் தன்னோடு இணைப்பதற்கு
பேசத் தொடங்கும் முதல் மொழி அம்.

பருவமாற்றங்கள் பல கடக்கின்றன  உன்
உருவ மாற்றங்கள் மலராய் மலர்ந்தது போல்
புரியாமல்த் தெரியாமல் பிரகாசிக்கின்றன
தென்னங் குரும்பைபோல் உன் அங்கத்தில்
இரு மார்பகங்கள்
சின்னச் சின்ன நீர்த்துளியாய் மின்னும்
முகப்பருக்கள்
கண்களின் தாகம் ஆண்களின் மோகம்
அழகை மெருகேற்ற அயராத உழைப்பு
பருவத்தின் மாற்றத்தில் பெண்கள் அழகானால்
உருவத்தின் மாற்றத்தை உலகம் படம் பிடிக்கும்

சுதந்திர காற்றுக்கு சுகமாய் வழிவிட்டாய்
ஏகாந்தம் விரும்பி தனியறை சுகம் அனுபவித்தாய்
கற்பனையை இரசித்தாய் கண்ணாடிக்குள் முகம் புதைத்தாய்
பருவமாற்றத்தில் பகுத்தறிவை இழந்து போகின்றாய்

பக்கம் பக்கமாய் உன்னைப் படிக்கின்றேன்
நீ மகளாகின்றாய் நான் தாயாகின்றேன்
கற்பனையில் காணாத அழகை
உன் அங்க அசைவில் காணுகின்றேன்
விரும்பியவனை ஏற்பாயா? இல்லை
நான் விரும்பியவனை ஏற்பாயா?

கேட்காமல் நான் பெற்ற பரிசும்
இவ்வுலகம் பெற்ற பரிசும் நீயே
இவ்வுலகத்தைக் காட்டினேன்.

இவ்வுலகத் திரைப்படத்தில்
நீ என்ன கதாபாத்திரம்!
காலம் காலமாய்க் காத்திருக்கும்
உன் இரசிகை நான்
என் ஆயுள் வரை எண்ணங்கள்
உன்னைச் சுற்றி யிருக்கும்
ஓசோன் படையாகவே யிருக்க
வேண்டுமென ஆசைப்படுகின்றேன்

தொட்டிலிலே தாலாட்ட தோளினிலே கைதட்ட
மடியினிலே தலைதடவ
தாயின் கரங்கள் போல் சிறந்த கருவி
எங்குமே படைக்கப்படுவதில்லை.

சோற்றுப் பருக்கைகளை
கறியுடனே குழைத்தெடுத்து
நிலவைக் காட்டி சோறூட்டிய
தாயின் கரங்களைத் தவிர
தரமான பொற்கரண்டி எங்குமில்லை

அம்மாவின் சேலைத் தலைப்பில்
முகம் துடைக்கையிலே
நாசிக்குக்குள் நுழைகின்ற
நறுமணத்தின் சுகத்துக்கு
சுவையான வரைவிலக்கணம் கிடையாது.

அம்மாவின் கறிச்சுவைக்கு இணையாக
எந்த அறுசுவையும் கிடையாது

பள்ளிப் பருவத்திலே துள்ளித் திரியும் போது
துடுக்கடக்கிய அம்மாவின் அந்த மந்திர வார்த்தைக்கு
இணையான மந்திரம் உலகத்தில் எங்குமே இல்லை.
அம்மாவின் ஒரு பார்வை போதும் எம்மைக் கட்டிப் போட

அம்மாவின் ஒரு சொல் போதும் எம்மை வழி நடத்த
மழைக்குக் குடையானாள்
பனிக்கு நெருப்பானாள்
நித்திரைக்குப் போர்வையானாள்
நோய்க்கு மருந்தானாள்

உடல் முழுதும் மலம் தடவி வரும் பிள்ளை
சந்தனக் குளியல் செய்தாளென கொஞ்சும் தாயை
அநாதை விடுதிகளில் யாரோ பராமரிக்கின்றார்

சேர்த்து வைக்கும் சொத்தெல்லாம்
அம்மா என்ற சொத்துக்கு ஈடாகாதெனும்
தத்துவம் புரியாதார் உலகில் இல்லை



# பெண்மை

ஒரு தாயின் உணர்விலிருந்து ஒரு இளம் பெண்ணின் உணர்வுக்குத் தாவுகிறேன்.

இளம் பெண் தன் உணர்வுகளைத் தன் மன ஓசையாய் கொட்டுகிறாள்.

அவ் உணர்வுகளில் பக்குவம், பண்புகள், பரிதவிப்புக்கள், அன்பு, காதல், காமம், கற்பனை, கட்டுப்பாடு, சுதந்திரம், வெறுப்பு, வேதனை தோல்வி வெற்றி என பல கதவுகள் திறந்து மூடும். கதவுகளில்லாச் சாளரங்களாய் சில உள்நுழைந்த வண்ணமே இருக்கும். வாழ்க்கையின் பரீட்சைக் களம் கடந்துவிட்டால் வாழ்க்கை அமைதி காணும். பரீட்சைக் களத்தில் குதித்தே வெளிவர வேண்டுமென வாழ்க்கை கற்பிக்கின்றது. நான் பெண்ணாகப் பிறந்தது குற்றமா? இல்லை பெண் என்ற பாலினம் வகுத்தது குற்றமா? பூமியின் பிறப்பிலேயே உலகம் அம்மணமாக இருந்திருந்தால் இந்த அவமானங்களும் அச்சுறுத்தல்களும் அச்சங்களும் பெண்மைக்கு தோன்றியிருக்காதோ!

தொடருகின்றேன் என் வாழ்க்கையின் அடையாளங்களை அடியெடுத்து வைத்த காலத்தில் இருந்து.

பெண் உலகத்தின் பிரமாவா? உலகை ஆட்டிப் படைக்கும் அற்புதமா? உலகத்தின் சாபமா?

வாழப்பிறந்தவளா? ஆளப்பிறந்தவளா? இறுதி மூச்சுவரை போராடப் பிறந்தவளா?

பொத்தி வைத்து உலகைப் புரியவைத்து
வித்து ஒன்று எனக்குள் விதைத்து
விருட்சமாய் உருவெடுக்க வினைகள் செய்த
தாயைப் பாடாமல் தரணியில் சுகம் ஏது?

கண்ணே! என்று கட்டி அணைத்தாய்
காற்றின் மொழிபோல் என்னைப் புரிந்து கொண்டாய்
செல்லமாய்ப் பேசிச் சிரிக்க வைத்தாய்
சிந்திக்கும் அழகைச் சிறப்பாய்ச் சொன்னாய்
அன்னம் ஊட்டி அழகு பார்த்தாய்
அறிவுப் பசியை நெறியாய்ப் பகர்ந்தாய்
அன்பு மழையில் நனைய வைத்தாய்
அணைக்கும் சுகத்தை அறிய வைத்தாய்
தாயின் அன்பை தரமாய்த் தந்தாய்
தரமாய் வாழக் கற்றுத் தந்தாய் - ஆனால்
சுற்றமும் சூழலும் என்னுள்
சுகந்தத்தையோ சுமையையோ புதைத்து விடும்
கறையையும் களங்கத்தையும் போதிக்கும்
வலியையும் வேதனையும் வரமாய்த் தரும்
புகழையும் அறிவையும் பொக்கிசமாய்த் தரும் - உன்
காந்தக் கண்களின் கவர்ச்சியினால்
வார்த்தைகளின் மெல்லிய தடவலினால்
நான் வார்க்கப்பட்டேன்
வடிக்கப்பட்டேன். செதுக்கப்பட்டேன்
சீரான வாழ்வுக்கு பழக்கப்பட்டேன்

சிட்டுக்குருவியாய் சிறகடித்தே சிந்தனைகளை வளர்த்தெடுத்தேன்
மண்சோறு சமைத்தெடுத்து பகிர்ந்துண்ணப் பழகிக்கொண்டேன்
கயிறடித்தல் பயிற்சியினால் உடல்பயிற்சி பெற்றுக் கொண்டேன்
ஊஞ்சல் கட்டி ஆடியதால் நாட்டுப் பாடல் நயமுணர்ந்தேன்
கீச்சுமூச்சுத் தம்பலத்தால் உலகவாழ்க்கை கற்றுக் கொண்டேன்
பூப்பறித்து மாலை கட்டி சீர்வரிசை அறிந்து கொண்டேன்
சேர்ந்திருத்தல் அழகென சிந்தையிலே எண்ணம் கொண்டேன்
வாயாடியென பெயரெடுத்து வழக்காடக் கற்றுக் கொண்டேன்
பொம்மை விளையாட்டிலே குடும்பஉறவைப் புரிந்து
கொண்டேன்

வீசும் காற்றும் வீழும் மழையும்
ஒதுங்கச் செய்ததில்லை
காட்டு வழியும் கானல் நீரும்
பயத்தைத் தந்ததில்லை
இரவின் இருளும் பகலின் ஒளியும்
தடுக்கவில்லை
துள்ளிக் குதித்தே பறந்து திரிந்தேன்
ஆணும் பெண்ணும் பேதமில்லை
அறியா வயதில் அனுபவம் இல்லை
பருவம் என்னைத் துரத்திப் பிடித்தது

கல்லூரிக் காலங்கள் கற்பித்தவை கணக்கிலடங்கா
தாயைப் பிரிய வைக்கும்
தனியே வாழ வைக்கும்
நாளின் பிறப்பும் மறைவும்
ஒழுக்கத்திற்குச் சவாலென உணரச் செய்யும்
நட்பின் மேன்மை புரிய வைக்கும்
தோள் கோடுப்போரும் துரோகியாவாரென
சொல்லித் தரும்
நயவஞ்சகர்களைக் கற்றுத் தரும்
பாசமென வேசமிடுவோரை
மனச்சிறை பழுது பார்க்கும்
விட்டில் பூச்சி என விழுந்துவிடாது
கட்டுப்பாடுகளை கற்க வைக்கும்
பாவிகள் பலியாவார்
அப்பாவிகள் அடக்கலமாவார்

போதுமென்ற மனத்தை பெற்றுவிட்டேன்
போதாத் தேவைகளை புரிந்து கொண்டேன்
நாளும் நடப்பவற்றை நயந்து கொண்டேன்
நாளை பலிக்குமென்று நிதானம் அடைந்தேன்
கற்று மனங்கள் மாயங் கண்டேன்
கருத்து நிறைத்து களங்கம் தவிர்த்தேன்

மலரின் மென்மை மேனியில் காண
மாசற்ற உள்ளம் அன்புமணம் வீச
படபடக்கும் கண்கள் பட்டாம் பூச்சியாக
விரல்களின் நளினம் ஆடல் காண
வார்த்தைகளில் வசியம் வளமாய் அமைய
நடந்தேன் வாழ்க்கைப்பாதை தோறும்
நலமே தோன்றுமென நல்லெண்ணம் கொண்டே

அன்பு எந்தன் ஆயுதமாகும்
அறிவு எந்தன் அணிகலனாகும்
அழகு என்னை ஆற்றுப்படுத்தும்
மானம் எனக்கு மதிப்பைக் கொடுக்கும்
பொறுமை எனக்கு புகழைப் புகட்டும்
சேர்க்கை என்னை சிந்திக்க வைக்கும்
நோக்கம் எனக்கு உயர்நிலை உணர்த்தும்
கண்கள் எனக்கு கட்டளை போடும்
கால்கள் என் பாதையைக் காட்டும்
ஆடை என்னை அவதானமாக்கும்
நூல்கள் எனக்கு வழியைக் காட்டும்
மொழிகள் எனக்கு முத்திரை பதிக்கும்

வேண்டா மனிதரைத் தேடிப் போவதில்லை
விரும்பா தொழில்கள் ஏற்பது இல்லை
கவர்ச்சி என்பதை மொழியில் பதிப்பேன்
கலங்கம் அறியா சொற்கள் கேட்பேன்
முகத்தின் முன்னே நிந்தை புரியேன்.
புதுமை புரிய முயன்று வெல்வேன்
கற்பது அனைத்தும் மூளைக்குள் எடுப்பேன்
கச்சிதமாக தேர்வு செய்வேன்
கழிவு அகன்ற பதிவுகளை
பக்குவமாய் பதிவில் வைப்பேன்
பகிர்ந்தே மகிழ்வேன்

வருபவையனைத்தும் வாங்கிக் கொள்ளும்
குப்பைத் தொட்டியாய் மனதை வையேன்
வந்தவை அனைத்திலும் வளத்தைத் தேடி
வளமாய் மூளைக்குப் பரிசளிப்பேன்

வண்ணாத்திப் பூச்சிகள் சிறகுகள் விரிக்கின்றன
வானத்தில் பறப்போம் என வாஞ்சை கொள்கின்றன
விரலளவே வீக்கம் எனத் தன்னகம் அறிந்திருந்தால்
ஆசை கொள்ள அது எத்தனிக்காது

பெட்டிப் பாம்பாய் அடங்கும் பெண்
பேதையானால் சீற்றம் கொள்ளாள்
சிந்திக்க பொறிதெறிக்கும் புதுமைப் பெண்
ஆயுதமாய் எழுத்தைத் தெறிக்க விடுவாள்

நானாக நான் வளர எங்கே விட்டதிச் சமுதாயம்.
குழந்தையில் இருந்தே விட்டுக்கொடுப்புக்களும்
பாதுகாப்புக்களும் சமுதாய அச்சமும்
என் உணர்வுகளைத் தட்டித் தடைபோடுகிறது.
கருவறை தந்த சுகத்தைத் தட்டிப் பறித்துவிட்டது.
உலகத்தின் பயணத்திற்கு
என்னைத் தாரை வார்த்துவிட்டேன்

எனக்கு ஒரு ஆசை
ஆய்வுகூடம் அமைக்க வேண்டும் – அங்கு
சமுதாயத்தை அடைக்க வேண்டும்
விஞ்ஞானிகளை அழைத்து வரவேண்டும்
மூளைகளை முழுவதுமாய்
திறக்க வேண்டும்
மூடநம்பிக்கைப் பதிவுகளை
முழுவதுமாக உரசிக் கழுவவேண்டும்
பெருமைக்காய் பொய் சொல்வார்க்கு
நாவைச் சுடுகின்ற சுரப்பைப்
புகுத்த வேண்டும்
மூளையிலே அன்ரெனா
பொருத்த வேண்டும் – அது
நல்ல அறிவை மட்டும்
இழுக்க வேண்டும்
சோம்பிக் கிடப்பார்க்கோர்
கல்சியப் படிவு எலும்பில்
உருவாக்க வேண்டும் – அது
முள்ளால் குத்தும் உணர்வை
ஏற்படுத்த வேண்டும்

அறிவைத் தேடும் காந்தவிசையை
அழுத்திப் பதிக்க வேண்டும் – அது
ஆராய்ந்த அறிவைத் தரவேண்டும்
கண்களுக்குள் ஒரு விளக்குப்
பதிக்க வேண்டும்
காமுகரைக் காணும் போது
எரிய வேண்டும்
பொறாமைச்சுரப்பை சுரக்க விடாது
முடக்க வேண்டும் – அது
உர்ர் என்ற முகத்திற்கு
மகிழ்ச்சி தரவேண்டும்
மூளையை மூடிவிட்டு சமுதாயத்தை
உலகத்தில் நடமாட விடவேண்டும்
கட்டுப்பாட்டுக் கருவியை
கையில் நான் வைத்திருக்க வேண்டும்

புவியீர்ப்பு விசையைத் தள்ளிவிட்டு
பூலோகம் எங்கும் பறக்க வேண்டும்
வான் கதிர்களை அள்ளி எடுத்து
வான்வெளியில் விரிய வேண்டும்
அண்டவெளி அற்புதத்தை இரசித்து மகிழ வேண்டும்
தனித்திருந்து விழித்திருந்து இன்பம் காண வேண்டும்

கல்விக்குள் கால் வைக்கிறது சமூகம்
காதலுக்குள் வேலி போடுகிறது சமூகம்
ஆடைக்குள் அடக்கம் போதிக்கிறது சமூகம்
பேச்சுக்குத் தடை போடுகிறது சமூகம்
சுதந்திரத்தைத் தட்டிப் பறிக்கிறது சமூகம்
ஆசைக்கு அணை போடுகிறது சமூகம்
காமத்தைக் காரணம் காட்டுகிறது சமூகம்
சமூகம் சமூகம் சமூகம்
இந்தச் சமூகம் நான் நொந்தபோது எங்கே போனது

எண்ணங்களுக்கு நெய் பூசி ஒளிர விட்டேன்
வண்ணக்கலவையாய் சிந்தனைகளை கலந்து விட்டேன்
வண்ண விளக்குகளாய்த் தெரியும் சிந்தனைகளை
காட்சிப்படுத்த சமுதாயத்தை நோக்கினேன்
கண்களை மூடித் திறக்க மாட்டோமென்று
அடம்பிடித்து அடக்கப் பார்க்கிறது உலகம்

அங்கங்களை மறைத்த வாழ்வு கசக்கிறது
திருமணச் சடங்குகளை வெறுக்கிறது மனது
குடும்ப வாழ்க்கை தேளாய் கொட்டுகிறது
பால் பாகுபாட்டில் பங்கம் தெரிகிறது
கட்டுப்பாட்டில் களங்கம் உள்ளதால்
கட்டுப்பாட்டை மீற உள்ளம்
துடியாய்த் துடிக்கிறது

தோள் மீது ஆடை ஏன் தந்தாய் சமூகமே
நாம் தோற்றுப் போகத் துண்டு போட்டாயா?
திருமணம் என்று கட்டிப் போடத் துணிந்தாயா?
விலங்குகளை உடைத்தெறியத் தவியாய்த் தவிக்கிறேன்
சாக்கடையில் புழுவாவேனா?
சங்கதிகளுக்கு சாட்சியாவேனா?
சுவர்க்கம் என்ற வாழ்வை
சோதனைக் களமாக்குவேனா?

காதல் தேவதையா உயிரின் காலனா
செழிப்பைச் சொரியும் அமிர்த வாசலா
வாழ்வை ஒடுக்கும் விடத்தின் பேழையா
சுவர்க்கம் காட்டி நரகம் உணர்த்தும்
மாய வலையின் நேயப்பிணையலா

அன்புப் பரிமாற்றம் வயதின் ஆசைக்களிப்பு
காதல் என்னும் வலையில் சிக்கித்
தேடிப் பெற்ற சுகம் தேவையென தெரிந்தவேளை
துடிப்புகளும் தவிப்புகளும் சொந்தமாவதேன்?
சுகமும் மனதில் சுமையாவதேன்

உன் கைகளுக்குள் அடங்கிப் போகும் தூரிகையாக
உன் வார்த்தைகளுக்குள் உறைந்து போகும் உணர்வுகளாக
உன் எண்ணங்களை ஆக்கிரமிக்கும் தேவதையாக
இருக்கவே நான் விரும்புகிறேன்.
யுத்தத்துக்குப் போகும் போராளியாக நீயும் எத்தனை பேரை
உன் தூரிகையால் கொன்று குவித்தாய்.
உன்னைச் சுற்றிச் சுழலும் ஆத்மாக்களுக்கு
உன் தூரிகையால் மட்டுமே மோட்சம் கொடுக்க முடியும்
எனக்குள் கரைந்து போன கலைஞனே
நீ எப்படி இருப்பாய் என்று எனக்கு தெரியாது
தெரிந்து கொள்ளவும் நான் விரும்பவில்லை
உன் குரல் என் காதுகளில் ஒலிப்பதைக் கூட நான்
விரும்பவில்லை
உன் தூரிகையோடு மட்டுமே நான் பேசவேண்டும்
உன் விரல்களின் சாதனைகள் மட்டுமே
என்னோடு கிசுகிசுக்க வேண்டும்

இரண்டு நிமிடம் கண் மூடினால்
சுவர்க்கத்திற்குப் போய்வரும் மனிதர்கள் மத்தியில்
இடைவிடாது அந்த முகமே தொல்லை கொடுக்கிறதே
எண்ணம் செதுக்கிய வடிவத்தை
மனதுள் ஏந்திப் பிடிக்கத் துடிக்கிறேன்
வெறும் கற்பனை உலகில் உன்உருவம்
சொந்தம் கொண்டாடுகிறது

என் அருகே மிருகமா அன்புமனிதனா
அறிய முடியாத  உணர்வை எனக்குள் விதைத்த
ஆண்டவனைச் சபித்த தருணங்களும் உண்டு

அங்கங்களை காட்சிப் பொருளாக்கும்
காமப்பிசாசு கட்டவிழ்ந்து விடுவதனால்
எம் அங்கங்கள் கூசும் வேதனையை
எடுத்தாள வார்த்தையின்றி தவிக்கும்
பெண்மையின் சோகநிலை

நான் ஒரு நெருப்பு தீயாய் எரிகிறேன்
தீண்டிப் பார்ப்பவர்களைச் சுட்டெரிக்கிறேன்
அன்பு என்னும் நீரால் அணைக்க நினைப்போரின்
போலிப் பாசத்தை நேசமென்று நம்பி
அணைந்து போகின்றேன்.
மரத்துக்குத் தெரிவதில்லை
பறவையின் இளைப்பாறும்  சுயநலம்

நான் ஒரு உலகம் என்னைச் சுற்றிப் பார்ப்பார்கள்
நான் தேன் என்னைச் சுவைக்க நினைப்பார்கள்
நான் ஒரு காட்சிப்பொருள் என்னை நன்றாக ரசிப்பார்கள்
யாரும் என்னைச் சொந்தம் கொண்டாடுவதில்லை

கட்டில் சுகம் காமத்தின் உயிர்ப் பாய்ச்சல்
நிமிர்ந்து பார்க்கிறேன் நிழலாய் உன் முகம்
விழியின் நிலைப்பிலே எனக்குள் ஒரு உயிரூட்டம்
இழந்தது பெண்மையா பெற்றது தாய்மையா
நீயே நானாக நானே நீயாக
இயற்கை அழித்த பிணைப்பு
பிரியேன் இந்த சுகத்தை
மறவேன் இந்த கணத்தை

எனக்குள் உன்னைத் திணித்து விட்டாய்
மனத்துக்குள் உல்லாச ஊஞ்சல் தாலாட்ட
விதை போட்ட உள்ளுணர்வு விருட்சமாக
உனக்குள் ஒரு உறவை உருவாக்குகிறேன்
எனக்குள் வரும் உறவு
உனக்கும் சொந்தமாகின்றது.

காதல் வரும் போது எதிர்பார்ப்புக்கள் எறியப்படும்
வார்த்தைகள் விடைபெறும்
மௌனம் கூட ஆயிரம் அர்த்தங்களை கொடுக்கும்
பெயரே மந்திரமாகும் – ஆனாலும்
நிதானம் என் மனதுக்குள் கட்டளையிடும்
எனக்குள் வளரப் போகும்
உயிரை காக்கும் உன்னை
பரீட்சித்துப் பார்க்கும்வரை

கண்ணுக்குள் நடமாடும் கயவன் உன்னைக் காணாது
விரகதாபத்தால் நரகவேதனை கொள்கின்றேன்
வில்லங்கம் எனக்குள் உன்னை வித்திட்ட விதியா
விளையாட்டாய் எனக்குள் புகுந்து கொண்டவுன்
பகட்டுப் பாசநடிப்பா

நான் அழகானவளா ஆயிரம் தடவைகள் கேட்கின்றேன்
நான் அழகானவளில்லை என்று நம்புவதே
மிகப் பெரிய சோகம்
நான் நம்பிக்கை இழந்தவளாகின்றேன்
இழக்கின்ற தருணங்களெல்லாம்
என்னைத் தாவிப்பிடிக்கின்றாய்.
கனவுக்கும் காதலுக்கும் இடையில்
இறந்து இறந்து மீள்கின்றேன்

காயப்பட்ட நெஞ்சுக்கு
உடைந்து போன இதயத்துக்கு
நீ மாத்திரமே வடிகால்
நிர்வாணமாக உனக்குள் நானாக வேண்டும்
எனக்குள் நீயாக வேண்டும்

நான் அழுகின்றபோது ஆறுதல் தந்த நீயே
எனக்குள் வந்து ஆளுமையையும் செய்கின்றாய்
என் சுதந்திரத்தை நீ பறிக்கின்றாயா?
என் விருப்புக்களை நீ பறிக்கின்றாயா?
எனக்கு நீ தேவையா?
நீ இன்றி என் ஆத்மா இயங்காதா?

ஒவ்வொரு சிரிப்புக்குள்ளும்
ஒளிந்திருக்கும் சூக்குமங்களை
வாழ்க்கைப் பாடம் இலகுவாகக்
கற்றுத் தந்துவிட்டுப் போகிறது
கொட்டுகின்ற தேள்களுக்கு மத்தியில்
தீண்டப்பட்டுக் கொண்டே இருக்கிறேன்

நான் ஏன் என்னை இழக்கின்றேன்?
என்னைச் சமாதானப்படுத்துவதற்காகப்
பலரும் ஏன் முனைகின்றார்கள்
அதற்கு நான் ஏன் வழிவிடுகின்றேன்.
பலரின் ஆறுதல் வார்த்தைகள்
எனக்கு மருந்தாகின்றன - ஆனால்
அவனுடைய வார்த்தைகள் மட்டுமே
என் கண்ணீருக்கு வடிகாலாகின்றன.

என் கண்ணீரைக் கொட்டுவதற்குத் தயாராகின்றேன்
அடங்கி கிடக்கும் வெள்ளத்தை ஏந்துகின்ற
பாத்திரம் அவன் கைகளிலேதான் இருக்கின்றன.

கைஅடக்க தொலைபேசியின் அடையாளங்களை
அடையாளம் தெரியாமல் அழிக்கிறேன் – ஆனால்
முகநூலின் முகவரியில் இருக்கின்றானா என்று தேடுகின்றேன்
மனதில் கல்லறை கட்டிவிட்டு
கல்வெட்டும் போட்டுவிட்டால்
அழிக்க முடியாத அடையாளம் அதுவல்லவா

அன்பு என்னும் ஆயுதத்தால்
என் ஆசைகளைக் கட்டிப்போடும் வித்தையை
அவனாலேயே
எனக்குப் புரியாமல்
என்னில் பயன்படுத்த முடியும்

கொட்டும் மழையாய் எனக்குள் அன்பையும்
கொட்டித் தீராத மழையாய்க் காதலையும்
ஊற்றி விட்ட அந்த மழையைத் தேடித்
தோற்றுப் போகிறேன்

எனது திறமைகள் எனக்குள் தீர்ந்து போக விடாமல்
எத்தனிக்கிறேன்.
வார்த்தைகளால் காயப்படுத்தி வழியும் விடுகின்றாய்
சொல் என்னும் கூரிய ஆயுதம் தாங்கி
என் இதயத்தைக் குத்திக் கிழிக்கின்றாய்
சோகத்தின் விளிம்பில் தத்தளிக்கின்றேன்
நீ என்னை வாழ விடுகின்றாயா! இல்லை
பாதையிலே முற்களைப் பதித்தே
நடக்கவிடுகின்றாயா!

பாறாங்கல்லைத் தூக்கியெறிய பிறர் உதவி தேவை
மனதுக்குள் விழுந்த சுமைக்கு என்னிடமே
மருந்து இருக்கிறது
துணைவரத் துடிக்கும் சமூகம்
கறையையும் அள்ளிவீசிக்
கலங்கத்தையும் விதைக்கிறது

சிலரைப் பிடிக்கவில்லை என்றாலும்
ஒத்துப் போக வேண்டியது பெண்மை என்பார்
பிடிக்கவில்லை என்று மனம் நினைத்துவிட்டால்
ஒத்துப் போவதே பிடிக்காததாகிவிடுகிறது

என் உடல் ஒரு அருங்காட்சியகம்
என் அன்பு ஒரு சோதனைக்கூடம்
இயற்கையின் படைப்புக்கள் எத்தனையோ
அத்தனையும் பேரழிவுகளையும் தருகின்றன

பெண் என்பது ஒரு பொக்கிசம்
அதை இரசிக்கத் தெரிந்தவர்கள்
சுவர்க்கத்தைக் காணுகின்றார்கள்
அதைப் பாதுகாக்கத் தெரியாதவர்கள்
அழித்துவிட்டுப் போகின்றார்கள்

நான் என்ன தணியாத நெருப்பா இல்லை
அலையடிக்கும் கடலின் குளிர்மையா!
தாலியை ஏற்றினாயா வேலியைப் போட்டாயா – நான்
கட்டிப் போட விலங்கல்ல காட்டாற்று வெள்ளம்
அனுபவித்து எறிய கறிவேப்பிலை இல்லை
இதயத் துடிப்பு

மகிழ்ச்சியால் சிரிக்க முடியவில்லை
கவலையால் அழ முடியவில்லை
நிசப்தம் ஆகிப்போன என் உணர்வுகளில்
சப்தத்தை கொண்டுவரும் மந்திரக்கோல்
அவனிடமே இருக்கிறது

நானே என் உறவைத் தேட வேண்டும்
பிறருக்காக என்உறவை ஏற்றுக்கொள்ள முடிவதில்லை.

கவலையிலும் துக்கத்திலும் இறுதியில்
நான் தனித்தே நிற்பேன்.
நீ விட்டுச் சென்ற பாதை
பல விடயங்களை விரித்துக் காட்டுகிறது

என்னை விட்டு அவன் பிரிகின்ற வேளை
என்னோடு கூட இருந்தது
கண்ணீர் குளம் மாத்திரம்தான்
கண்ணீர்க் குளத்துள் விழுந்து
காணாமல் போன உன்னை
நான் தேடப்போவதில்லை

வலி சுமந்த வார்த்தைகளே
மனத்துக்கு மருந்தாகட்டும்
நினைவழிக்கும் செயலாக்கட்டும்
அரிதாரம் மலிவாக்கிப் போன
வார்த்தைகளும் முகங்களும்
சுற்றி வலம் வந்த போது
சுதாகரிக்காது மயங்கிக் கிடந்தேன்
உலக வாழ்க்கை நிலையில்லையென
புரியாத பேதையில்லை
நெருங்கி வருவோர் உன்னதமில்லையென
புரியாத பேதையானேன்

சீரான வாழ்க்கை ஓட்டம்
கல் விழுந்த நீர்த்திவலைகள் ஆகின
கலங்கிய நீர்த்திவலையை
யாரும் தேற்றத் தேவையில்லை
நீர்த்திவலையே சுனாமியாவேன்
சுழன்று அடிப்பேன்
எரிமலையாய் ஆவேன்
சுட்டுப் பொசுக்குவேன்

அளவில்லாத வருத்தங்களைத் தந்த இவ்வுலகம்
அளவில்லாத் தங்கச் சுரங்கங்களைக் கொண்டிருக்கிறது.
நானாகத்தான் அதைத் தேடிப் பெறவேண்டும்

விதி என்றே வாழ்வில் எதையும்
ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.
தவறுகளுக்கு நானே காரணம்.

என்னைக் காதலிக்கிறேன் என்று சொன்னபோது
நீ அழகாக இருந்தாய்
உன்னை நான் நெருங்கியபோது
அழகும் காயப்படுத்தும் என்று அறிந்தேன்
ரோஜாவில் முள்ளும் இருக்கிறது

வார்த்தைக்குள் இருந்த விஷத்தையும்
பார்வைக்குள் இருந்த களவையும்
பாகுபடுத்திப் பார்க்க முடியாத பாவியான்
மனதையறியும் கருவியைத் தேடியலைகிறேன்

இதமாக இருந்தது காதல்
உன்னை நீ வெளிக்காட்டும் வரை
இதமாக இருந்தன விரல்கள்
வெட்டும் நாளாக மாறும் வரை
தேனாக இருந்தது குரல்
தீர்ந்து போகும் வரை
அணைப்பிலே சுகம் இருந்தது
அது அதிகாரமாக மாறும் வரை

நீ நீயாக இல்லை நான்
என்னைத் தரும்வரை
என்னை தந்தேன்
நீ நீயானாய்
நான் நானாக இல்லை

விளக்கில் விழுந்த விட்டில் பூச்சி போல்
கணத்தில் விழுந்தேன் உன் காம வலையில்.
மகரந்தம் சிந்தும் மலர்களுக்கு தெரிவதில்லை
தேனீயின் மாயப்புத்தி

நீ உருவாக ஒரு இடம் தேவை
நீயாக வளர ஒரு துணை தேவை
உன் உணர்வுகளுக்கு வடிகால் தேவை
உன் வாரிசு சுமக்கும் சுமைதாங்கி தேவை
அனைத்துமாய் நான் இருக்க
அவதாரங்கள் பலவாறாக நானிருக்க
உன்னை மிஞ்சி நான் இருக்க மட்டும்
உனக்கு இஷ்டமில்லை

நானறியாது நான் செய்த பாவங்களுக்கு
வடிகாலாக
நீயே என்னைச் சோதிக்கின்றாயா.

எழுத்துக்கள் என்னை நானே
கழுவித் துடைக்கும் நீராகின்றன
என்னை வசியம் படுத்தும் மந்திரமாகின்றன.

என்னை உடைத்தவன்
காலில் நான் விழுந்து
என்னை உருக்காத
இறுக்கமான இதயம்
எனக்கு வேண்டும்

என்னை எத்தனை பேர் கவர்கின்றார்களென
என் இதயம் ஏங்கத் தேவையில்லை
என் இதயம் என்னைக் கவரவேண்டும்
என்னை நான் மதிக்க வேண்டும்
எனக்கு நான் நேர்மையாக வேண்டும்
என்னை நான் எப்படி வடிவமைத்தேனோ
அதையே நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்
என்னுடன் நானே தொடர்புடையவளாக இருக்க வேண்டும்.
என்னிடம் எதையும் எதிர்பார்க்காது
அன்பைத் தரும் இதயங்களுக்காக
என்னை நான் இழப்பேன்

மதுவுக்குள் மறைந்திருக்கும் மருந்து போல்
அழுக்கான மனதுக்குள் கலந்திருக்கும்
தூய்மையைத் தேடிப் பார்த்துத்
தோற்றுப் போகும் நான்
விடையில்லாக் கேள்விகளுக்குள்
வீழ்ந்து கொண்டிருக்கிறேன்

கனவுக்கும் நனவுக்கும் இடையில் ஊசலாடுகின்றேன்.
கனவு பலிக்குமா? நிஜங்கள் அரங்கேறுமா?

எழுத்துக்களின் கோர்வை எனக்குள் நடமாடுவது
என்னைக் குணப்படுத்துவதற்காகவோ
வெளிப்படுத்துவதற்காகவோ என்று
என் வரிகள் சொல்லாது

தித்திக்கும் நினைவுகள் ஒரு பகுதி
திரும்பிப் பார்க்க வைக்கும் நிகழ்வுகள் ஒரு பகுதி
எண்ணி எண்ணி ஏங்கும் கனவுகள் ஒரு பகுதி ஆனால்
சோக அனுபவங்கள்
வாழ்க்கையின் ஒரு பகுதியே
சோர்ந்து விட மாட்டேன்
எனக்குள் நானே விழித்துக் கொள்வேன்

என் இதயம் வலிப்பது எனக்காக அல்ல
என்போல் ஏங்கும் பெண்களுக்காக
வானம் அழுவது பூமி விளைவதற்காக
பேனா அழுவது பேதைமை நீக்குவதற்காக

ஆணே ஜாக்கிரதை!
ஆணேயுன் கடிவாளமோ பெண்ணின் கையில்
உடல்பலம் உன்னிடம் மனபலம் பெண்ணிடம்
உடல்பலம் குன்றிப்போம் மனபலம் குன்றுவதில்லை
தூண்டி விளங்கிடும் விளக்குப் போல்
விளங்கிட உன்னைத் தூண்டுபவள் அவளே
உன்னைத் துலங்கச் செய்பவள் அவளே
பெண்ணின் திறம் குறைந்து போயின்
உந்தன் நடையும் நிமிருமோ சொல்
அழகாய் இருப்பாள் அழகைக் கொடுப்பாள்
அறிவாய் இருப்பாள் அறிவைக் கொடுப்பாள்
நிலையாய் உன் பெயர் உலகில் நிலைக்க
உனக்காய் வாரிசை திடமாய்ச் சுமப்பாள்
சுற்றம் சேர்ப்பாள் சொந்தம் காப்பாள்
இயங்கா உன்னை இயங்க வைப்பாள்
வற்றாக் கடலென வாழ் இன்பம் தருவாள்
தன்னைத் தாழ்த்தி உன்னை உயர்த்துவாள் – நீ
தேடிப்பெற்ற செல்வம் அவளே – உன்னைத்
தாங்கி நிற்கும் பூமியும் அவளே
பொறுமையும் பண்பும் புகழிடம் கொண்டதால்
பூமியை விஞ்சியும் வாழ்ந்திடத் துணிவாள் – அவள்
பூகம்பமாய் வெடித்துப் பொங்கி எழுந்தால்
பூமியில் நீயும் வாழ்ந்திடத் தகுமோ
புழுதியில் விழுந்து சாக்கடையாவாய்
புரிந்து கொண்டு பரிந்து வாழ்ந்தால் – இப்
பூமியே உனக்கு சொர்க்கம் ஆகும்



## முதுமை

வாழ்க்கையின் கட்டங்கள் தோறும்
வாழ்ந்து பெற்ற சன்றிதழ்
முதுமை

சான்றிதழ் பெறாமலே சாகத் துணிபவரும்
வாழ்வை இழந்தவரும்
வாழ்க்கைப் பரீட்சையில் பெறாத பட்டம்
முதுமை

நிந்திக்கும் பிள்ளைகளின் அலட்சியமும்
சாதிக்க நினைத்துத் தோற்பதுவும்
மனசுக்குள் அடங்கிப்போன வார்த்தைகளும்
நிறைவேறா அன்புக் கட்டளைகளும்
முடிக்க முடியாத ஆசைகளும்
முடிந்து போன முயற்சிகளும்
மனத்துக்குள் கல்லாகிப்போகும் பருவம்
முதுமை

தேடாமல் கிடைக்கும் சொத்து
விலையில்லாப் பரிசு
கடந்ததை மீட்டிப் பார்க்கும் காலம்
கடமை தேடி அலையாத பருவம்
உலகம் தந்த உன்னத பரிசு
போற்ற வேண்டிய பொக்கிஷம்
முதுமை என்னும் வலிமை

மீட்டிப் பார்க்கிறேன்
வரிகளை வடிக்கிறேன்
சொற்கள் காற்றிலே மிதந்து
முதுமைக்குக் காவியம் பாடுகின்றன
என்னை வார்த்தெடுத்த
தேவதை தள்ளாடுகின்றாள்
என் வரிகள் தோள் கொடுக்கின்றன
என் கூடவே பயணம் செய்யுங்கள்
அவளுக்கு கண் இமைகளால்
கைதட்டல் கொடுப்போம்

அம்மாவின பார்வைக்குள் ஆத்மா அடங்கிவிடும்
பார்வையிலே பாடம் நடத்தி
பக்குவப் பண்புகளை புரிய வைக்கும் – அப்
பார்வைக்குள் சக்தியைப் புதைத்து வைத்த
புண்ணிய ஆத்மாவைப் போற்ற வேண்டிய
காலம் தாயின்
முதுமைக் காலம்

ஓசையுடைத்த இராகமவள்
பூசைக்குரிய கடவுளவள்
காசைக்கொடுப்பினும்
கடையில் கிடைத்திடாப்
பாசமலர்

அந்த வானத்தைப் போல மனம்
இந்த பூமியைப் போல பொறுமை
இந்தக் கடலைப் போல அன்பு
எங்கோ எல்லாம் தேடுகிறேன் என் தாயை
எனக்குள் அவள் புகுந்திருக்கும் அறிவைப்
புரியாத பைத்தியக்காரி நான்
தாயைப் பிரிந்தவர்களே
கண்களைத் திரையிட்டு
ஆழக்கடலுள் தேடிப்பாருங்கள்
ஆத்ம சக்தியாக
அவதாரமெடுத்திருக்கும் அம்மா
அற்புத சக்தியாக
உங்களுக்குள் ஆட்சி செய்வாள்.

முகரேகைகளின் அழகு – தாயின்
முகத்தில் வரைந்திருக்கும் போதே
முகப்பூச்சில்லா கோலங்களும்
தமக்காக களவாடும் முகவரியாய்

அசைகின்ற நீர் கோப்பை
அம்மா நீ அளைகின்ற போதுதான்
அழகான நடனமாடுகின்றது
சேலைக்கே வாசனை அது
தொட்டிலாய் அவதாரம் பெறும்போது

பற்கள் இல்லாமல் உணவைப்
பதப்படுத்த முடியுமென்ற
வித்தையை விளங்கச்செய்த
காணொளி நீ

பத்துமுறை நீயின்று
உரைக்கும் ஒரே செய்தி – என்
பாடப்புத்தகத்தில் பக்கம் பக்கமாய்
பலதடவை நான் மனனம் செய்த
ஒரே பாடத்தை படம் காட்டுகிறது

என்னோடு இருக்கின்றாய்
எங்கேயோ சஞ்சரிக்கின்றாய்
என் தவிப்புப் புரியாத
நாட்களை நீ தொட்டுவிட்டாய்

பஞ்சு மெத்தையின் தன்மை அறியாதவர்களே
அம்மாவைக் கட்டி அணைத்துக் கொள்ளுங்கள்.
நறுமணத்தைப் புரியாதவர்களே
அம்மாவின் கன்னத்தில் முத்தமிட்டுப்
பாருங்கள்.
புரியாத தெரியாத அற்புத உணர்வுகளில்
மயங்கிப் போவீர்கள்

சுண்டங்காய் கறியுடனே சுடுசோற்றைப்
பிசைந்தெடுத்து நெய்விட்டு ஊட்டிவிட்ட
கைகளுக்கு வைரநகை போட்டாலும்
போதாத மனமிருக்கும்

பசியில்லை களைப்பில்லை
ஆனாலும்
அம்மாவின் கைகளால்
உணவு உண்ண
மனம் ஏங்கும்

உடலுக்கும் நிலத்துக்கும்
உணவு கொடுக்கும் உத்தியை – அம்மாவுக்கு
உணவு கொடுத்து
ரசித்துப் பாருங்கள்

எனக்கு மட்டுமல்ல
நிலத்துக்கும் உணவூட்டுவாய் என்பதை
இப்போதே அறிகிறேன்
பூச்சிகளும் பூஜிக்குமுன் தானத்தை
அறிவால் மட்டும் நடப்பதல்ல
நற்செயல்கள்

அம்மாவின் இரு கால்களுக்கிடையில்
இறுக்கிக் கொண்ட சேலை
எனதன்பூஞ்சல்

தாயின் கைக்கும் உடலுக்கும் இடையில்
முகம்புதைத்துத் தூங்கும் இடமே
இரவுப் பஞ்சணை

கட்டியணைத்தேன் அம்மா
உன் இதயத்துடிப்பு
என் இதயத்தில் மத்தளம்
கொட்டுவதேன்?
ஒருவேளை உன் கருவறை
கற்றுத் தந்த பாடமாக இருக்குமோ

எனக்கு இறக்கை தந்த தேவதையே - உங்கள்
விரிக்கத் துடிக்கும் இறகுகளை
எனக்காக சுருக்கிக் கொள்ளுங்கள்
என் பாதைக்கு இன்னும்
வெளிச்சம் போதவில்லை

சிறகுக்குள் அகப்படும் குஞ்சாக
எனக்குள் அகப்படும் மூச்சாக
விதைக்குள் அகப்படும் விருட்சமாக
உனக்குள் அகப்பட்டுக் கிடைக்கவே ஆசைப்படுகிறேன்

கண்ணீருக்குள் அகப்படும் வேதனையை
கண்ணே வெளிப்படுத்தும்
என் நெஞ்சுக்குள் புதைந்த வேதனைக்கு
வார்த்தைகளே வடிகால்கள்

மதுவின்றி தள்ளாடவும்
பயிற்சியின்றி தியானம் செய்யவும்
நேரம் அறியாது உறங்கவும்
யார் உனக்கு கற்பித்தார்கள்

அன்று படுக்கையை நனைத்தேன்
நீ இன்று படுக்கையை நனைக்கிறாய்
தடக்கித் தடக்கி விழுந்தேன்
தாவித்தாவி எனைப் பிடித்தாய் - இன்று
தடுமாறும் கால்களுக்கு தாங்கிப்பிடிக்க
கைத்தடியாய் நான் வேண்டும்

வாழ்க்கைச் சுழற்சி
ஆடை மாற்றும் போது
அறிந்து கொள்கிறேன் - நீ
ஆடைகளை மேனியிலே விரும்பவில்லை
பேரக்குழந்தையின் ஆடையை
அணிந்து பார்த்து தோற்றுப் போகிறாய்

வாழ்க்கை முழுவதும் உன்னோடு வாழ
ஆசைப்படுகிறேன்
நீ இல்லா உலகுக்குக் கோடி கொடுத்து
யாரும் கூட்டிச் செல்ல வேண்டாம்
அழகான அந்தச் சிரிப்பிற்கு
விலையாரும் பேச வேண்டாம்
காலனிடம் என்னைக்
காணிக்கையாக்குகிறேன் - என்
கருமையத்தின் உணர்வோடு
தாயையும் என்னையும் ஓருயிராக்கி
உன்னோடு அழைத்துச் செல்

உலகின் விடுதலை உன்னோடு வேண்டும்
உனக்குள் சங்கமமாகி
உனக்குள் கரைந்து போக வேண்டும்
தாயில்லா தேசம் சோபையில்லா நரகம்

அம்மாவை இழந்தவர்களே
வானத்தைச் சற்றுநேரம் உற்றுப் பாருங்கள்
அங்கு ஒரு வான்துகளாக - உங்களை
வாழ்த்திக் கொண்டு
வழிநடத்திக் கொண்டிருக்கும்
தேவதையைக் காண்பீர்கள்

காற்று வீசி விழுகின்ற பழங்களும்
காலம் வந்து விழுகின்ற பழங்களும்
உறவை அறுத்தே பிரிகின்றன.

ஆடித் தேய்ந்த பம்பரம்
ஓடிக் களைத்த இயந்திரம்
அனுபவித்துக் கலைந்த வேதனைகள்
பேசித் தீர்த்த நா
கேள்விகளால் நிறைந்த காதுகள்
பார்த்துச் சோர்ந்த கண்கள்
நடந்து தேய்ந்த கால்கள்
வலிமை தாங்கி உதிரும் எலும்புகள்
இறந்து கொட்டும் மூளைச் செல்கள்
இவைதான் முதுமையின் முகவரிகள்

வரவும் செலவும் வாழ்க்கைக் கணக்கு
வாழ்ந்து பார்த்து முடித்த நினைவுகள்
விடைபெறும் வேளை தானாக உதிர்ந்து
உடலுக்குள் அஸ்தமனமாகி மறந்து போகின்றன

சலனமற்ற பார்வைக்குள் பதிவுகள் ஏதுமில்லை
எத்தனிக்கும் பேச்சில் மொழியில்லை
வரிசைகட்டி நிற்கும் நாட்கள்
வேதனை சுமந்த நாட்கள்

வர்க்க பேதம் பார்க்கா மழைபோல்
நிறைகுறை நோக்கா அன்பைப் பொழிவாய்
சுற்றமெல்லாம் போற்ற சுதந்திரமாய் வளர்த்தாய்
சுட்டியுன் குறை நோக்கத் தெரியவில்லை
எட்டிப் எட்டிப் போகாதே அம்மா
என்னைக் கட்டி அணைத்துக் கொள்

பால் வண்ணத்திலே பாசி படிந்ததுபோல் – உன்
மதிவதனம் மறுக்கொண்டு பொலிவிழந்தாலும்
புரியாத ஓரழகில் பொலிவோடு தோன்றுகிறாய்
காலந்தோறும் உன் மாற்றம் கண்டுகளிக்கிறேன்
நாள்தோறும் உனதன்பை மிதமாக அனுபவிக்கிறேன்

ஆற்றுப்படுக்கையில் வீழ் மீனாய்
துடிக்கிறாள் என் தாய்
விடுதலை கேட்டு தவிக்கிறாள்
சுடுமணலில் புதைந்துவிட்ட தேகமாய்
தவிக்கிறேன் நான்
விடுவதா? பிடிப்பதா?

சிறகுகள் இன்றிப் பறக்கவும்
உறவுகள் மறந்து பிரியவும்
வாழ்வைத் துறந்து மடியவும்
அழைக்க முடியாத்தூரம் பார்த்து
அண்ணாந்து கண்மூடித் துதிக்கிறாள்

காலச்சக்கரம் உதிர்த்த விதைகளில்
பிஞ்சாய் காயாய் கனியாய்
பறந்தன பல
முற்றிய கனியாய் வாழ்வை சுவைத்து
வெற்றிக்கனியாய்ச் சுவைக்கச் செய்தே - என்னைத்
தோற்கச் செய்யத் துடிக்கும் தாயை
தாங்கும் பூமியாய் நான் இன்று ................

ஆராயிரம் கோடி செல்களில்
அழிந்தவை அழிந்ததே
அழியாது இருப்பவைக்குள் ஆட்சிசெய்யும்
இறை துகள்களைக் இறைஞ்சிக் கேட்கிறேன்
அவளுள் வாழுங்கள்
இன்னும் சிலநாட்கள்
என்தாய் என்னோடு வாழச்
சிலநாட்கள்
வரம் தாருங்கள்.



# அம்மா கவிதைகள்

வாழ்க்கைக்கு உரமாவாள்
மழைக்கு குடையாவாள்
உயர்வுக்கு ஏணியாவாள்
நோய்க்கு மருந்தாவாள்
அவள் யார்
அவள்தான் தாய்
உயிரெழுத்து மெய் எழுத்து உயிர்மெய் எழுத்து
இணைந்து வந்து உயிரையும் உடலையும் இணைத்து
உயிர் தந்த உறவு அம்மா

அளவுகடந்து நாம் உச்சரித்த ஒரே சொல் அம்மா
உரக்கச் சொல்லியிருக்கிறாம்
அழுது சொல்லியிருக்கின்றோம்.
ஆவேசமாகச் சொல்லியிருக்கின்றோம்.
குழைந்து சொல்லியிருக்கின்றோம்
கெஞ்சிச் சொல்லியிருக்கின்றோம்.
அதட்டிச் சொல்லியிருக்கின்றோம்
எத்தனை உணர்ச்சிகள் இருக்கின்றனவோ
அத்தனை உணர்ச்சிகளிலும் பயன்படுத்திய
ஒரே சொல் அம்மா
அடம்பிடித்திருக்கின்றோம்
ஆட்டிப் படைத்திருக்கின்றோம்.
சரியென்று நிரூபித்துப் பார்த்திருக்கின்றோம்.
முட்டாளாக்கியிருக்கின்றோம் – எத்தனைமுறை
நாம் முட்டாளாக்கினாலும்
விரோதியாக்கினாலும்
எதிரியாக்கினாலும்
அன்பை மட்டுமே பொழியும் அதிசய உறவு அம்மா
அம்மா என்று சொல்லிப் பாருங்கள்
எத்தனை முறை சொன்னாலும்

அத்தனை முறையிலும்
அந்தச் சொல்லிலேயே தேன் கலந்திருக்கும்
கட்டியணைப்பிலே சுகம் இருக்கும் - எமை
தொட்டுப் பேசுகையில் சுகம் இருக்கும்
தாய் மடிதந்த சுகம் தரணியில் எங்கும் இல்லை
அவள் கண்டிப்பான வார்த்தையிலே
எதிர்கால வளர்ச்சிக்கான மந்திரம் இருக்கும்
கண்ணைக் காட்டி எம்மைக் கட்டிப் போட வைக்க
அவளால் மட்டுமே முடியும்
சோறு ஆக்கிப் போடுவது அவளானாலும்
சுவை பார்ப்பது நாமாகத் தான் இருக்கும்
அந்தக் கைப்பக்குவத்திற்கு நிகராக
எந்த சமையல் நிபுணரும் உலகத்தில் இல்லை
அம்மாக்கு நிகராக யாரும் பிறக்கவும் முடியாது
இருக்கவும் முடியாது

# அம்மா ஒரு ஆச்சரியம்

நீள விழிப் பார்வையின் ஓரங்களில் – உன்
காட்சிகளின் காயங்கள் மாறவில்லை
மிதக்கின்ற உன் நினைவுகளை என்
நினைவுப்பலகை இன்னுமே அழித்து விடவில்லை

யாருக்கும் தெரியாமல் ஆயிரம் முறை அம்மா என்று
அழைத்துப் பார்க்கிறேன் அணைத்துப் பார்க்கிறேன்
சித்திரஒளிக் கீற்றாய் சிந்தனைக்குள் ஒரு விம்பம்
நாசித் துவாரத்துக்குள் நான் சுவைத்த உன் நறுமணம்
என்னைக் கட்டிப் போட்ட அந்த அழகின் விம்பம்
என் உயிர் உலகில் இருக்கும் வரை
என்னை விட்டுப் போகாது மனம் விட்டு மாளாது

எழுதி எழுதிக் குவிக்கிறேன் ஏற்றுக் கொள்ள நீ இல்லை
திறமைகளுக்கு சில்லுப்பூட்டுகிறேன் கூட வர நீ இல்லை
அழகழகாய் ஆடை கட்டுகிறேன் மடிப்பெடுக்க நீ இல்லை
பெற்ற கடன் முடிந்தது நான் விட்ட குறை செய் என்றாய்
எட்டி எட்டிப் போகிறேன் நான்
உன் உயரம் எட்டவே முடியவில்லை

சோற்றுப் பருக்கைக்குள் நெய்விட்டு தாளித்த
சுண்டக்காய் கறி மணம் மூக்குக்குள் நிற்கிறது நானும்தான்
சற்றும் மாற்றமின்றி சமைத்துத்தான் பார்கின்றேன்
சத்தியமாய் புரியவில்லை உன் சாகசக் கறிச்சுவையை

பரீட்சை இடைவெளியில் பதறியடித்து ஓடி வர
சுடுசுடு சோற்றுக்குள் மீன்குழம்பு சேர்த்தெடுத்து
ஆவென்று கூறிக்கூறி ஊட்டிவிட்ட மணம் மட்டும்
மூக்கிற்குள் நிற்கிறது ஊட்டிவிட்ட உன் கரங்கள்
உருத்தெரியாமல் மறைந்துதான் போனது

சோளன் முத்துக்களை தனித்தனியே பிரித்தெடுத்து
ஒத்தை இரட்டை விளையாட்டை உன்னோடு நானாட
நான் தோற்றுப் போகும் வேளையெல்லாம்
முத்துக்களை மாற்றி வைத்து நீ தோற்றுப் போகும்
சங்கதியை இப்போது தாயாகித்தான் உணர்கின்றேன்

அன்பிலும் அழகிலும் அறிவிலும் ஆர்வத்திலும்
உன்னை வெல்லும் யுத்தியை மந்திரமாய் மறைத்து விட்டாயே
ஏணிக்கு வழி உண்டு உன்னிடம் எட்டி வர வழியில்லை
நினைத்துத்தான் பார்க்கின்றேன் வாழ்க்கை பேராச்சரியம்

# வலி தாங்கி வாழ்வளித்த தெய்வமே

என் முதல் மொழி தமிழ் மொழியானால்
என் உதட்டின் முதல் சொல் அம்மா அல்லவா
பூவிற்கு மணம் உண்மையானால்
என் வாழ்வுக்கு வளம் நீங்கள் அல்லவா
படைப்பின் கடவுள் பிரம்மாவானால்
என்னைப் படைத்த பிரம்மா நீங்கள்
எனைக் காக்கும் கடவுளும் நீங்களே
பாலைவனக் குடிநீர் நீங்கள்
கோடைகாலக் குளிர்நீர் நீங்கள்
மாரிகால வெப்பமூட்டி நீங்கள்
வருவாய் காணாத் தொழிலாளி நீங்கள்
கொட்டும் மழைக்கு ஈடாமோ நீங்கள்
என்னில் கொட்டிய பரிவுக்கு
விளைநிலம் கண்டு பயிர் செய்வான் உழவன் என்
மனம் கண்டா பாசத்தை கொட்டுகின்றீர்கள்
உங்கள் மடியே எனக்குப் பஞ்சணை
என் மனத்தின் கவலை நீக்கும் அரியணை
இடியைத் தாங்கி மழை தரும் மேகம் போல்
என் உதையைத் தாங்கி உறவு தந்த உத்தமி
வானத்தின் எல்லை தெரிவதில்லை உங்கள்
பாசத்தின் அளவும் சொல்லக் கணக்கில்லை
வெட்டிப் பொலிவானது வைரம் உங்களை
ஒட்டிய வாழ்வில் தரமானேன் நான்
வகைவகை உணவுதான் உண்டாலும்
உங்கள் வாயமுதுக்கு ஈடாமோ
தாய்பாலை மிஞ்சிய சத்துணவு எங்குண்டு
தாய்ப்பாசத்திற்கு மிஞ்சிய அன்பு எங்குண்டு
தாலாட்டும் இதமான சூடும் தந்ததுங்கள் கருவறை
காலாட்டிக் கையாட்டிக் களித்திருந்த துங்கள் கருவறை
வாடகை இன்றி வாழ்ந்த இடமது கருவறை என்

வாழ்க்கையிலே எங்குமில்லை இதுபோல் தனியறை
சூரியன் உள்ள காலம் வரை நீங்கள் வாழவேண்டும்
சந்திரனின் ஒலி போல் தேகம் ஒளிரவேண்டும்
பூமியின் ஈர்ப்பு சக்திபோல் எம்மிடையே ஈர்ப்பு வேண்டும்
என் தாய்போல் யாருமில்லை என்னும் நேசம் வேண்டும்
என் வாழ்வுவரை நீங்கள் என்கூட வர வேண்டும்
என் வாழ்வின் வசந்தமெல்லாம் களித்திருக்க வேண்டும்



கௌசி

“பெண்ணைத் தெய்வமாக்கியது ஆன்மீகம்; தாசியாக்கியது நிலப்பிரபுத்துவம்; அடிமையாக்கியது வைதீகம்; வேலைக்காரியாக்கியது குடும்பத்துவம்; பெண்ணை மனுசியாக்கியது பெரியாரியம்” என்பார் பிரபஞ்சன். “தாயாய் தேய்வதும் உண்டு; கட்டிய தாரமாய்த் தீர்வதும் உண்டு; சேயாய் மாய்வதும் உண்டு; ஒரு பெண்ணாய் சிறந்ததும் உண்டோ?” என்று வினா எழுப்புகிறார் மகாகவி ஈரோடு தமிழன்பன். இயற்கையின் வலிமைமிகு உயிரினம் பெண்தான். ஓர் உயிரைத் தன்னுள் தாங்கி உலகுக்கு அளிக்கும் பெண்ணின் மாபெரும் வலிமை வியப்புக்குரியது. எனவேதான் மண் காண பெண் ஒரு அதிசயம்; விண்காண பெண் ஓர் அற்புதம்; தமிழ் காண பெண் ஓர் இலக்கியம். இவற்றை உறுதியாக்கும் சான்றமைப்பாக கவிஞர் கௌசி இந்நூலை அளித்துள்ளார். இந்நூலில் உள்ள இளமை, தாய்மை, முதுமை என மூன்று வாழ்நிலைகளை பாசாங்கற்ற மொழியில் எழுதி செல்கிறது அவருடைய மெய் வரிகள். வாழ்த்துகள் கௌசி

**தி.அமிர்த கணேசன்**
நிறுவனர்,
உலகப் பெண் கவிஞர் பேரவை,
அட்லாண்டா

ரூ.200/-